Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 02 சனிக்கிழமை (14.02.2015) பக்கங்கள் 20 | ஓசை – 137

# வலி. வடக்கு மீள்குடியமர்வு அரசின் திட்டம் சாத்தியமற்றது

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

வலி. வடக்கில் மக்களின் மீள்குடியமர்வுக்காக அரசு மேற்கொள்ளவிருக்கும் செயற்றிட்டம் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் காணிகளை விடுவிப்பதாக மக்களை ஏமாற்றுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஆயிரம் ஏக்கர் காணியினை விடுவித்து, அவற்றில் இருநூறு ஏக்கர் பரப்பில் மீள்குடியேற்றத்துக்கான மாதிரிக் கிராமத்தினை அமைத்து பொதுமக்களை குடியமர்த்தவுள்ளதாகவும், அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இச்செயற்பாடானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றே. வடக்கில் பொது மக்களின் வளங்களை உரிய மக்களுக்கே வழங்க வேண்டும் என்று நாம் ஆரம்பத்தில் இருந்தே அரசாங்கத்திடம் தெரிவித்தோம். இப்பகுதியில் ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 23 ஆயிரம் பேர் மொத்தமாக குடியமர்த்தப்பட வேண்டும் எனவும் அதற்கான காரணங்களையும் தெரிவித்தோம்.

இதற்கமைய இவ்விடயம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கடந்த 2013 ஆம் ஆண்டில் அரசாங்கமே உயர் நீதிமன்றத்தில் அறிவித்தலொன்றினை கொடுத்திருந்தது. மேலும் ஜனாதிபதியின் வாக்குறுதியும் இக்காணிகளை விடுவிப்பது என்றே இருந்தது. எமக்கு ஜனாதிபதி வாக்குறுதி

19 ஆம் பக்கம் பார்க்க

## கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து ஜேர்மனுக்கு திரும்புவதற்காக விமான நிலையத்திற்குச் சென்ற புலம்பெயர் தமிழர் ஒருவரும், அவருடன் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

# சுத்தமான குடிநீருக்காக யாழ். மக்கள் ஏக்கம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் குறிப்பாக வலிகாமம் பகுதியில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்புக்கள் உக்கிரமடைந்து வருகிறது. நிலக்கீழ் நீரில கலந்த கழிவு ஒயில் நாளுக்கு நாள் வலிகாமத்தில் பல பகுதிகளுக்கும் பரவி வருகிறது. நிலத்தடி நீர் ஓட்டத்துடன் இந்த கழிவு ஒயில் இப்போது வலிகாமத்தின் வடக்கு மற்றும் தெற்கு ஆகிய பகுதிகளிலும் வலி. கிழக்கின் ஒருபகுதிக்கும் பரவிவிட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

## "நொதேர்ண் பவர்" மீதான தடை; மேன்முறையீடு நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை ஆட்சேபித்து நொதேர்ண் பவர் நிறுவனத்தினரால் யாழ்.மேல் நீதிமன்றில் செய்யப்பட்ட முறையீட்டை விசாரித்த நீதிமன்று அந்தத் தடையை தொடர்ந்து அமுல்படுத்த உத்தரவிட்டது.

சுன்னாகம், தெல்லிப்பளைப் பகுதிகளில் கிணறுகளில் கழிவு ஒயில் கலந்த விவகாரம் தொடர்பில் பொது மக்களால் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் நொதேர்ண் பவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன்.துறைமுக அபிவிருத்தி சாத்தியங்கள் பற்றி ஆராய்வு

### அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேரடி விஜயம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் வட பகுதியில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும் என கப்பல் மற்றும் துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அமைச்சர் நேற்று மதியம் காங்கேசன்துறை துறைமுகத்தை நேரில் பார்வையிட்டார். இதன்போது அங்கு ஊடகவியலாளர்களுடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் வடமாகாண இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கமுடியும். அத்துடன்

19 ஆம் பக்கம் பார்க்க

காதலில் ஆறு வகை நீங்கள் எந்த ரகம்? பக்கம்:11

## இன நல்லிணக்கம் வலுவாகி வரும் வேளையில் முப்படையினருக்கு பொலிஸ் அதிகாரம் ஏன்?

(யாழ்ப்பாணம்)

முப்படைகளுக்கு பொலிஸாருக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக கடந்த 2015.02.02 ஆம் திகதியைக் கொண்ட வர்த்தமானியில் அறிவித்தல் வெளியாகியுள்ளது. இது தமிழ் பேசும் மக்களிடையே அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஊடக அறிக்கையில் டக்ளஸ் தேவானந்தா

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும், இந்நாட்டில் வடக்கு மற்றும் தென்பகுதி மக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளதாக சுதந்திர தின உரையின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதியின் இக்கருத்தை



ஈ.பி.டி.பி.யினராகிய நாம் வரவேற்றிருந்தோம். இந்நிலையில்,

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் நேற்று கையெழுத்து வேட்டை

### கைதிகளின் விடுதலை கோரி

(யாழ்ப்பாணம்)

சிறையில் வாடும் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக் கோரியும் குமார் குணரத்தினம் உட்பட நாடு கடத்தப்பட்ட அனைவரினதும் அரசியலில் ஈடுபடும் உரிமை வழங்கக் கோரியும் முன்னிலை சோஷலிசக் கட்சியினர் நேற்று யாழ். பஸ் தரிப்பு நிலையத்தில் கையெழுத்து போராட்டத்தை நடாத்தினர்.


நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் மற்றும் உயிர் பிழைப்பதற்காக நாட்டிலிருந்து தப்பிச்சென்ற ஊடகவியலாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் உட்பட அநேகமானோரை தற்போதைய அரசு அழைப்பு விடுத்துள்ள போதிலும்

19 ஆம் பக்கம் பார்க்க

ICC CRICKET WORLD CUP 2015 Final Tickets Sales & Price

உலகக் கிண்ணத் திருவிழா பலப்பரீட்சை இன்று ஆரம்பம்





வவுனியா அரசங்குளம், அரசமுறிப்பு, விளாத்திக்குளம், வேப்பங்குளம், ஓமந்தை ஆகிய கிராமங்களில் வறுமைக்கோட்டுக்குள் வாழும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் காணலாம்.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | MY STYLE |
| Am 09.55 | காலைச்செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T .COM |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# பன்னங்கண்டி செல்லும் பிரதான வீதிப் பாலம் சேதம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் இருந்து பிறவுண் கம்பனி ஊடாக பன்னங்கண்டி செல்லும் வீதியின் பிரதான பாலம் சேதமடைந்து காணப்படுகின்றது. கிளிநொச்சி ஏ-9 வீதியின் பரந்தன் சந்திக்கும் கரடிப் போக்கு சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பன்னங்கண்டி, முரசுமோட்டை ஆகிய பகுதிகளுக்கும் ஏ - 35 வீதியின் உண்டியல் ஒழுங்கை சந்தியையும் இணைக்கும் வகையில் இந்தப் பாலம் அமைந்துள்ளது.

மிகவும் பழமை வாய்ந்த விவசாய நிலங்களுக்கு செல்வதற்கு அமைந்துள்ள பிறவுண் கொம்பனி வீதி புனரமைக்கப்படாமல் காணப்படுவதுடன் அதில் காணப்படும் பிரதான ஆற்றின் பாலமும் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்தும் விவசாயிகள் அறுவடைக் காலங்களிலும் பயிர்ச் செய்கை காலங்களிலும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## 11 வேட்பாளர்கள் விலக முயற்சி

முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட கரைத்துறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இரு பிரதேச சபைகளுக்கான தேர்தலில் 11 வேட்பாளர்கள், தாம் தேர்தலில் போட்டியிடவில்லை என எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் நேற்று தெரிவித்தார்.

கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற இருந்த குறித்த தேர்தலானது இம்மாதம் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் போட்டியிட இருந்த 10 வேட்பாளர்களும், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு அதே கட்சியில் போட்டியிட இருந்த ஒருவருமான மொத்தம் 11 வேட்பாளர்கள் தாங்கள் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை என எழுத்து மூலமாக எமக்கு அனுப்பியிருந்தனர். அவர்கள் அனுப்பிய கடிதம் தேர்தல் அணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் அவர்களின் அந்த வாபஸ் பெறும் கடிதத்தை ஏற்பதற்கு சட்டத்தில் இடமில்லை என்பதால் தேர்தல் ஆணையாளர் அக்கடிதத்தை ஏற்பதற்கு மறுத்து விட்டார் என்றார்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் இந்தியத் துணைத் தூதுவர் எஸ். நடராஜா கலந்து கொள்ளவுள்ளார். (105)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1135

திகதி 12.02.2015

வெற்றி எண்கள் — ஆங்கில எழுத்து

22 26 41 63 G

ஜக்பொட் பரிசு ரூ. 1,30,91,340/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,30,91,340/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 50,000/= | ரூ. 8,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 255 | 1,000/= | ரூ. 2,55,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 403 | 1,000/= | ரூ. 4,03,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11519 | 60/= | ரூ. 6,91,140/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5980 | 40/= | ரூ. 2,39,200/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 150000 | 20/= | ரூ. 30,00,000/= |
| ஆங்கில எழுத்து | 21707 | 20/= | ரூ. 4,34,140/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,822,480/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 13,384,780/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.02.16 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(c/3817)


# சைக்கிளில் சென்றவரை மோதிய ஆட்டோ மாயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்றவரை மோதித் தள்ளி காயப்படுத்திய ஆட்டோ ஸ்தலத்திலிருந்து ஓடித்தப்பிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் திருநெல்வேலியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் திருநெல்வேலி சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ். மாநகர சபையில் பணிபுரியும் வாய்பேச முடியாத அரசடி லேன் திருநெல்வேலியைச் சேர்ந்த க. சண்முகநாதன் (வயது- 57) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

## மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை சித்தியம்புளியடி சித்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ அண்ணமார் தேவஸ்தான மகாசிவராத்திரி விழா எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு நான்கு யாமப் பூசையும் சமய கலை நிகழ்வுகளும், அதிகாலையில் அண்ணமார் பெருமான் வெளி வீதி வலம்வரும் காட்சியும் மகேஸ்வர பூசையும் அன்னதானம் வழங்கலும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து அண்ணமார் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தால் வழங்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் வழங்கலும் இடம்பெறும்.

விசேட நிகழ்வாக மயிலிட்டி வடக்கு ஸ்ரீ கலை அம்பாள் நாடக மன்றத்தினர் பெருமையுடன் வழங்கும் நவீன காத்தவராயன் நாடகமும் இடம்பெறவுள்ளது.

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

டேர்டன்ஸின் இலவச மருத்துவ முகாம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இந்த இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

குருதியின் சர்க்கரை அளவு மற்றும் கொழுப்பின் அளவு என்பன பரிசோதிக்க முடிவதுடன் ECG இருதய மின் துடிப்புப் பதிவு மற்றும் பொது வைத்திய நிபுணர்கள் மற்றும் இருதய நோய் சம்பந்தமான வைத்திய நிபுணரை சந்திக்கும் சேவையும் இதன்போது இடம்பெறவுள்ளது.

இச்சேவையைப் பெறவிரும்புவோர் 12 மணி நேரம் உணவை தவிர்த்து பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வவுனிக்குளத்திற்கு நீர் வழங்க பறங்கியாற்றிலிருந்து ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் பாண்டியன் குளம் ஆகிய இரு பிரதேச செயலகங்களுக்கும் உட்பட்ட பறங்கியாற்றிலிருந்து வவுனிக் குளத்திற்கு நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதியிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ரிசாட் பதியுதீன் உறுதியளித்ததாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மகாலிங்கம் தயாநந்தன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

குறித்த இரு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மக்கள் சிறுபோகம் மற்றும் பெரும் போகம் என்பவற்றை மேற்கொள்வதற்கு நீரில்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதுகுறித்து குறித்த பிரதேசங்களிலுள்ள விவசாயம், கமக்கார அமைப்புக்கள், மக்கள் ஆகியோர் என்னிடம் முறையிட்டனர்.

வவுனிக்குளத்திற்கு பறங்கியாற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அம்மக்களின் அன்பான கோரிக்கைக்கு அமைய கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.


இவ்வாறு பறங்கியாற்றை மறைத்து வவுனிக்குளத்திற்கு நீரைக் கொண்டு செல்வதன் மூலம் 40 சிறிய குளங்களும், 2 பெரிய குளங்களும் நீர் நிறைந்து காணப்படும். இதனால் இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 30 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 6 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நன்மையடைவார்கள் எனவும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

இதுகுறித்து ஜனாதிபதியுடன் நேரடியாக பேசி விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதாக அமைச்சர் வாக்குறுதியளித்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணசாரதா சேவாச்சிரமத்தில் தைப்பூசமும் பூரணை ஆராதனையும் மிகச்சிறப்பாக நடைபெற்றதுடன் அங்கு அன்னதானம் நடைபெறுவதையும் காணலாம். (01)

# லொறியுடன் ஓட்டோ மோதி தாவடியில் ஒருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

வீதியோரமாக நிறுத்தப்பட்ட லொறியுடன் ஓட்டோ மோதியதில் அதன் சாரதி படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் தாவடிப் பிள்ளையார் கோவில் அருகே இடம்பெற்றது. இதில் புதுமடம் சுன்னாகத்தைச் சேர்ந்த மாணிக்கம் விஜயகுமார் (வயது 51) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

லொறியின் புறத்தே ஓட்டோ மோதியதால் அது பெரும் சேதமடைந்தது. அத்துடன் சாரதியும் படுகாயமடைந்தார். அப்பகுதியினர் சாரதியை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதேச சபைகளுக்கான தேர்தல் வாக்காளர் அட்டைகள் விநியோகம்

(புதுக்குடியிருப்பு)

எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள கரைத்துறைப் பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இரு பிரதேச சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை முதல் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ராஜேந்திரா சசீலன் கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், "கடந்த 2012 ஆம் ஆண்டு குறித்த இரு பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்ட போது நீதிமன்ற உத்தரவுக்கமைய குறித்த தேர்தல் பிற்போடப்பட்டிருந்தது.

எனினும் குறித்த இரு பிரதேச சபைகளுக்கும் திட்டமிட்டபடி தேர்தலை நடாத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இரு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் நடாத்தப் படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

அத்துடன் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு 11 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 90 வேட்பாளர்களும், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு 9 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 72 வேட்பாளர்களும் போட்டியிடவுள்ளனர்.

இதேவேளை, கரைதுறைப் பற்றில் 23,559 பேரும், புதுக்குடியிருப்பில் 29,279 பேரும் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். வாக்காளர் அட்டைகள் தபால் நிலையங்கள் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு மன்னாரில் கலந்துரையாடல்



திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் திருக்கேதீஸ்வர ஆலய வசந்த மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது, சிவராத்திரியை முன்னிட்டு மாவட்டத்தில் பல கிராமங்களிலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் சுமார் ஐந்து இலட்சம் பக்தர்கள் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு வருவர் என்று எதிர்பார்ப்பதால் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது குறித்து முக்கியமாக .ஆராயப்பட்டது.

இதற்கமைய இலங்கை போக்குவரத்து சபையின் 45 பஸ்களையும் தனியார் போக்குவரத்து சங்கத்தின் 50 பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் ஏனைய வசதிகள் குறித்தும் ஆராயப்பட்டு, சம்பந்தப்பட்ட துறையினரிடம் பொறுப்புக்கள் பகிரப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில், திருக்கேதீஸ்வர ஆலய முக்கியஸ்தர்களான தவயோகராஜா, புலவர் திருநாவுக்கரசு, எஸ்.எஸ். இராமகிருஷ்ணன், வீ.கந்தசாமி, திருமதி.கைலாசப்பிள்ளை, எஸ்.ராகவன், வைத்தியகலாநிதி மு.கதிர்காமநாதன் உட்பட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# வவுனியா நகரப் பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது

வவுனியா நகரப் பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி பி.ரகுநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த புதன்கிழமை வவுனியா நகரப் பகுதியில் கஞ்சாவுடன் இருவர் நடமாடுகின்றனர் என்று பூனாவ கடற்படை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தெரிவித்தனர். இந்தத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது இருவர் கைது செய்யப்பட்டனர். ஒருவரிடம் இருந்து 917 கிராம் கேரளக் கஞ்சாவும் மற்றைய நபரிடம் இருந்து 837 கிராம் கேரளக் கஞ்சாவும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். இதேவேளை, குறித்த இருவரும் யாழ்ப்பாணத்தில் இருந்தே கஞ்சாவை கொண்டு வந்தனர் என்றும் தெரியவருகிறது.



பொன்னாலை நாராயணன் தாகசாந்தி நிலையம் பொன்னாலைச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டு தைப்பொங்கல் தினத்தன்று திறந்துவைக்கப்பட்டது. இந்நிழ்வில் நல்லை ஆதின முதல்வர் உள்ளிட்ட விருந்தினர்கள் நிலையத்தை நாடாவெட்டி திறந்துவைப்பதையும் கலந்து கொண்ட விருந்தினர்களையும் காணலாம். (50)

வசந்தம் ஒரே நாளில் மலர்ந்து விடுவதில்லை. அதேபோல வாழ்வில், உயர்வும் ஒரே நாளில் கிட்டி விடாது. - அரிஸ்டாட்டில்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628. கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811. thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கொடுமையான உலகிலிருந்து தப்பிக்க....

காதலர் தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. மற்றெல்லா உணர்ச்சிகளை விடவும் உணர்ச்சிபூர்வமான கொண்டாட்டம் இதில் மிகையாக இருப்பது யோசிக்க வைக்கிறது. காதல் நாயைக் கூட எதுகை மோனையுடன் குரைக்கச் செய்துவிடுகிறது என்று ஒரு ஆங்கிலப் பழமொழி கூறுகிறது.

கவிதை எழுதத் தொடங்குகிறவர்கள் எல்லோருமே காதலில்தான் ஆரம்பிப்பதாகவும் ஒரு கருத்து உண்டு. காதல் மனிதனை இவ்வளவு அல்லாட வைப்பதற்கு அவனது மனம்தான் காரணம் என்றால், மனித இனம் காலாகாலமாக கேட்டும் அறிந்தும் வந்த விஷயங்களால் உருவானதுதான் இந்தக் காதல் உணர்வாக இருக்க வேண்டும்.

காதல் என்பது கற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தன்மைதான். காதலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கா விட்டால் யாரும் காதல் வயப்பட்டிருக்க மாட்டார்கள் என்கிறார் ரோச்பௌகால்ட் என்பவர். அதாவது இலக்கியங்கள் மற்றும் புனைவுகளால் அது தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மாறாக, காதல் நமது உடலிலிருந்து தோற்றம் பெறுகிறது என்றால், அதாவது ஓமோன்கள் மற்றும் உடலின் சுரப்புகளால் அந்த உணர்ச்சி தூண்டப்படுகிறது என்றால் அது காமத்தின் ஒரு வடிவமாக இருக்க வேண்டும்.

காதல் பற்றி ஈ.வெ.ரா.பெரியார் சொல்லியிருப்பதும் நம் கவனத்திற்குரியது. 1931 ஆம் ஆண்டு 'குடியரசு' இதழில் அவர் எழுதியது இது:

"காதலுக்கு ஏதேதோ கற்பனைகளை கற்பித்து ஆண் பெண்களுக்குள் புகுத்தி விட்டதால் ஆண் பெண்களும் தாங்கள் உண்மையான காதலர்கள் என்று காட்டிக்கொள்ள வேண்டுமென்று கருதி, எப்படிக் குழந்தைகள் தூங்குவது போல் வேஷம் போட்டு கண்களை மூடிக்கொண்டிருந்தால் பெரியவர்கள் குழந்தைகளின் தூக்கத்தைப் பரிசோதிப்பதற்காக "தூங்கினால் கால் ஆடுமே" என்று சொன்னால் அந்தக் குழந்தை தன்னைத் தூங்குவதாக நினைக்கவேண்டுமென்று கருதி காலைச் சிறிது ஆட்டுமோ அதுபோலும், எப்படி பெண்கள் இப்படி இப்படி இருப்பதுதான் கற்பு என்றால் பெண்கள் அதுபோலெல்லாம் நடப்பது போல் நடப்பதாய் காட்டித் தங்களைக் கற்புள்ளவர்கள் என்று காட்டிக் கொள்ளுகின்றார்களோ அதுபோலும் உண்மையான காதல்களானால் இப்படி இருப்பார்களே என்று சொல்லிவிட்டால் அல்லது அதற்கு இலக்கணம் கற்பித்து விட்டால் அதுபோலவே நடந்து காதலர்கள் என்பவர்களும் தங்கள் காதலைக் காட்டிக் கொள்ளுகிறார்கள். இதற்காகவே அவர்கள் இல்லாத வேஷத்தையெல்லாம் போடுகிறார்கள்.

ஆகவே ஆசையைவிட, அன்பை விட, நட்பைவிட காதல் என்பதாக வேறு ஒன்று இல்லை. அவ்வன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள் கூட மக்களுக்கு அ:்றிணைப் பொருள்கள் இடத்திலும் மற்ற உயர்திணைப் பொருள்களிடத்திலும் ஏற்படுவது போல் தானே ஒழிய வேறில்லை.

ஆனால் அன்பும், ஆசையும், நட்பும் மற்றும் எதுவானாலும் மன இன்பத்திற்கும், திருப்திக்குமேயொழிய மனதிற்குத் திருப்தியும், இன்பமும் இல்லாமல் அன்பும், ஆசையும், நட்பும் இருப்பதாய் காட்டுவதற்காக அல்ல."

காதலர் தினக் கொண்டாட்டங்கள் வேறு வேறு வர்த்தக நோக்கங்களுக்காக பெருப்பிக்கப்பட்டிருந்தாலும், மனிதனின் சந்தோஷத்திற்காக இருக்கும் காதலை கொண்டாடுவதில் தப்பில்லை.

காதல், இந்தக் கொடுமையான உலகிலிருந்து நம்மைத் தனிப்படுத்தி நமக்குப் பாதுகாப்பு அளிப்பதாக உணரப்படுவதால், அது கொண்டாடப்படுகிறது என்கிறார் டயன் அக்கர்மென். சரிதான்!

- ஆசிரியர்

# சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு அடுத்தவாரம் 1300 பேர் இணைப்பு

க.பொ.த. (சா.தா) தரப் பரீட்சையில் சித்தியடைந்த 1300 பேர் அடுத்த வாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளரும், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமுமான சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

மரணதண்டனை வழங்குவதற்கு ஜனாதிபதியின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற சட்டத்தைத் திருத்துவதன் மூலம் மரணதண்டனைக்கு காத்திருக்கும் குற்றவாளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

சந்தேகநபர் ஒருவருக்கு நீதிமன்றத்தில் நீதிபதி மரணதண்டனை விதித்தாலும், ஜனாதிபதியின் அனுமதியுடன் தூக்கிலிடுமாறே நீதிமன்றம் அறிவிக்கும். இதனால் தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதியின் அனுமதியைப் பெறுவதற்காக நீண்ட நாட்கள் காத்திருக்கவேண்டி ஏற்படும்.

இது தொடர்பான சட்டம் திருத்தப்பட வேண்டும். ஜனாதிபதியின் அனுமதி இன்றி நீதிமன்றமே தூக்கிலிடுமாறு உத்தரவிட்டால் சிறைச்சாலைகளில் காணப்படும் இடப்பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய முடியும் என்றும் அவர் கூறினார். மரண தண்டனை விதிக்கப்பட்ட 1000 பேர் சிறையில் உள்ளனர்.

சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை இன்னமும் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் மற்றும் அங்குனுகொலபலஸ் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டதும் இடப்பற்றாக்குறையை தீர்க்க முடியும் என நினைக்கின்றோம்.

அதேநேரம், சிறைச்சாலைகள் ஆணையாளராக இருந்த காலத்தில் பணியாளர்களுக்கான வளங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தேன். புதிய அரசாங்கத்தின் ஊடாக சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு 50 பஸ் வண்டிகளும், 10 லொறிகளும், 8 தண்ணீர் பவுசர்களும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# எதிர்வரும் பொதுத்தேர்தலில் யானை சின்னத்தில் போட்டி

## ஐ.தே.க.அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடும். எனவே, ஐ.தே.கவுடன் இணைந்து போட்டியிட விரும்பும் கட்சிகளுக்குத் திறந்த அழைப்பை விடுக்கின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது நெடுஞ்சாலைகள், உயர்கல்வி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும், அக்கட்சியின் பொதுச் செயலாளருமான கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துக் கூறுகையில்,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாறு காணாத வெற்றிபெறவுள்ளது. இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதியை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்க சில கட்சிகள் முயற்சிசெய்து வருகின்றன. அவ்வாறு அவர் போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவாலாக அமையும் எனக் கூறமுடியாது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடையும் எனத் தெரிவித்தனர். நாங்கள் மக்களின் வாக்குப் பலத்தால் பதில் கொடுத்து வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றோம். ஆகவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாம் வெற்றிபெறுவது நிச்சயம். ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு சவாலாக இருந்த மகிந்தவை வீட்டுக்கு அனுப்பியுள்ளோம். அவ்வாறான நிலையில், இந்தப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அவர் ஒரு சவால் அல்லர். ஜனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு இலஞ்சம், சலுகைகள் வழங்கி வாக்குகளைப் பெற்றது மாத்திரமன்றி, மக்களை அச்சுறுத்தி தொடர்ந்தும் இந்நாட்டில் அராஜக ஆட்சியை செய்ய திட்டமிட்டிருந்தனர். அவற்றுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளமை தற்போது வெளிச்சமாகியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு சில பிரதேசங்களிலேயே தோல்வியடைந்தது. அதுவும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலேயே.

ஆனால், இம்முறை பொதுத் தேர்தலில் இந்நிலைமையும் மாறும். அதற்கான வேலைத்திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம் என்றார்.

# துமிந்தவிடம் நடாத்தப்பட்ட விசாரணைகள் பூர்த்தியடைந்தன

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

அவரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அஜித் ரோஹன கூறியுள்ளார்.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய வெலேசுதா என்பவர் வழங்கிய தகவலின் அடிப்படையில், துமிந்த சில்வாவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த 3 நாட்கள் சுமார் 20 மணித்தியாலங்கள் இவ் விசாரணைகள் இடம்பெற்றன.

துமிந்த சில்வாவிடம் அடிக்கடி விசாரணைகள் நடைபெற்றபோதும் அவர் கைதுசெய்யப்படாமை குறித்து, மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர அண்மையில் அதிருப்தி வெளியிட்டார்.

எதுஎவ்வாறு இருப்பினும் சந்தேகநபர் ஒருவரை கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தினால், உரிய சாட்சிகள் இல்லாவிடில் அவர் பிணையில் வெளியில் வரமுடியும் என அஜித் ரோஹன சுட்டிக்காட்டினார்.

எனவே போதுமான சாட்சிகளுடன் சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்திய பின்னர் நீண்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர் குற்றவாளியா அல்லது நிரபராதியா என தீர்மானிப்பதே முக்கியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

# ஊழல் மோசடி விசாரணைக்கு உதவ அதிகாரிகள் அடங்கிய செயலகம்

## அமைச்சரவை அங்கீகாரம்

பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு குழுவின் விசாரணைகளுக்குத் தேவையான நிர்வாக மட்டத்திலான ஒத்துழைப்புகளை வழங்குவதற்காக உயர் அதிகாரிகள் அடங்கிய செயலகம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்மொழிந்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அத்துடன், சட்டவிரோத நிதி பரிமாற்றல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பொலிஸ் மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் நிதி குற்றவியல் விசாரணைப் பிரிவொன்றை நிறுவுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

முன்னைய ஆட்சியில் இடம்பெற்ற பாரிய ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தி, அதனுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் இருப்பதற்குத் தேவையான சிபாரிசுகளை பெறும் நோக்கிலேயே ஊழல் எதிர்ப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சட்டவிரோத நிதி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரணை நடத்தும்போது, அதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது. அமெரிக்காவின் உதவியை நாடவும் இலங்கை அரசு எதிர் பார்க்கின்றது. தொழில்நுட்ப உதவி, அதிகாரிகளுக்கான பயிற்சி அனுபவ பகிர்வு உட்பட முக்கிய சில உதவிகளை அரசு எதிர்பார்க்கின்றது.



புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் முன்பள்ளி கலைவிழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும், கிராம உத்தியோகத்தர் செல்வி விமல்சினி தங்கவேல் மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினரான வடமராட்சி கல்வி வலய முறைசாராக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி வேதநாயகி இராசகுமாரன் பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

# வடமாகாணத்தில் 2200 மண்மாதிரிகள் ஆய்வு

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இரண்டாயிரத்து இருநூறு மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிகபணிபபாளர் கலாநிதி சி.ஜெ. அரசகேசரி தெரிவித்துள்ளார்.

கடந்த யுத்தகாலத்தில் பயிர்ச் செய்கை நிலங்கள் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாமை மற்றும் உவர்நீர்த்தடுப்பணைகள் சேதமடைந்து பயிர்ச் செய்கை நிலங்களில் உவர் நீர் உட்சென்றமை ஆகியவற்றால் பயிர்ச் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியிருந்தன.

இதனையடுத்து தமது பயிர்ச் செய்கை நிலங்களின் மண்மாதிரிகளை ஆய்வு செய்துதருமாறு விவசாயிகள் விடுத்த கோரிக்கைக்கிணங்க திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும் கிளிநொச்சியிலும் மண்ணியல் ஆய்வுகூடங்கள் நிர்வகிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டுகளில் வடபிராந்தியத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் இருந்தும் இரண்டாயிரத்து இருநூறு மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் மாற்றீட்டுப் பயிர்களை மேற்கொள்வதற்குத் துல்லியமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வெவ்வேறு மண் இயல்புகளைக் கொண்ட வலயங்களாக வகுக்கப்பட்டு அவற்றுக்குரிய பரிந்துரைகளும் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, நோய்ப் பீடைகளை ஆராய்ச்சி செய்வது புதிய நோய்த்தொற்றுக்களை தடுப்பது மற்றும் தாவர நோய்கள் சம்பந்தமான சகல ஆராய்ச்சிகள் இவ் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(63)

# உடுவில் வாசிக்கு கிடைத்தது பரிசு

கடந்த புதன்கிழமை அதிஸ்டம் பார்க்கப்பட்ட சுப்பிரி வாசனா சீட்டிழுப்பில் உடுவில் வாசியொருவருக்கு 50 ஆயிரம் ரூபா பரிசு கிடைத்துள்ளது.

21-52-65 ஆகிய மூன்று இலக்கங்களுடன் 13 என்னும் சுப்பர் இலக்கமும் பொருந்திக் கொண்டதனால் அவர் இப்பரிசுத் தொகைக்கு உரியவரானார். சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் அதிஸ்டச் சீட்டுக்கள் விற்பனை செய்யும் வைத்திலிங்கம் நடராசா என்பவரிடம் இவ்வதிஸ்டச் சீட்டினை உடுவில் வாசி பெற்றிருந்தார்.

சுமார் நான்கு மாதகால இடைவெளியின் பின்னர் சுன்னாகத்தில் சீட்டு வாங்கிய ஒருவருக்கு இவ்வதிஸ்டம் கிடைத்துள்ளது. முன்னர் இச் சீட்டு விற்பனையாளரிடம் அதிஸ்டச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்ட பலர் பணப்பரிசுகளை அடிக்கடி பெற்றுக்கொண்டதுடன் பண்டா கார் ஒன்றும் ஒருவருக்குப் பரிசாகக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (137)

# மாணவர்கள் அவதி

சித்தங்கேணி சந்தியில் பயணிகள் நிழற்குடை இன்மையால் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் மிகுந்த சிரமத்தை நாளாந்தம் எதிர்நோக்குகின்றனர்.

அராலி(789), மாதகல்(787), காரைநகர்(782/785/786), தெல்லிப்பளை (740) போன்ற பகுதிகளுக்கான பிரதான போக்குவரத்து மார்க்கமாக சித்தங்கேணி சந்தி விளங்குகிறது.

நாளாந்தம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் இவ் வழியால் பிரயாணம் செய்கின்றனர்.

பொதுமக்களின் நன்மை கருதி விரைவில் ஒரு பஸ் தரிப்பு நிலையம் அமைக்கப்படல் வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (48)

# கவிதைநூல் வெளியிடப்பட்டது

பருத்தித்துறை இன்பர்சிட்டியைச்சேர்ந்த செல்வி அ.கயல்விழியின் தேடலின்சாரல் கவிதைநூல் வெளியீட்டு விழா பருத்தித்துறை ராஜாராணி சேவை இல்ல மண்டபத்தில் பருத்தித்துறை கலைஞர் வட்டத்தலைவர் கலைப்பரிதி ஜே.இருதயராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

வரவேற்புரையை கே.சூரியகுமாரன் நிகழ்த்தினார். ஆசியுரையை அருட்திரு.ரீ.நிருபன் நிசானந் அடிகளாரும் சைவப்புலவர் சிவஸ்ரீ இ.திருமாறன் குருக்களும் நிகழ்த்தினர். நூல் அறிமுகவுரையை யோகா கராத்தே ஆசான் எம்.இரத்தினசோதி நிகழ்த்தினார்.

நூல் வெளியீட்டுரையை அருட்கவிராயர் பொன்சக்திவேல் நிகழ்த்தினார் நூலின் முதற்பிரதியை வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி செல்வ சுகுணா சேனாதிராஜா பெற்றுக்கொண்டார்.

வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி எஸ்.சிவகேஸ்வரன் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி ஆசிரியர் எஸ். சிவனேஸ்வரன் ஆகியோர் நூல் நயப்புரையை நிகழ்த்தினர் நூலாசிரியை செல்வி. ஏ.கயல்விழியின் ஏற்புரையையடுத்து பூச்சியல் ஆய்வாளர் பொன்.இராசதுரை நன்றியுரை வழங்கினார். (01)

# வீதிப்புனரமைப்பு, போக்குவரத்து வசதிகள் இல்லை மாணவர்கள், பெற்றோர் கவனயீர்ப்பு போராட்டம்

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குச் செல்லாது பாடசாலை சீருடையுடன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.



மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த சுமார் நூற்றிற்கும் அதிகமான மாணவர்கள் நானாட்டான் ம.வி.பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

நானாட்டானில் இருந்து மடுக்கரை கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதி சேதமடைந்துள்ளமையினால் நானாட்டானில் இருந்து மடுக்கரை கிராமத்திற்கான அரச தனியார் போக்குவரத்துச் சேவைகள் பல மாதமாக தடைப்பட்டுள்ளது.

வீதிகள் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதோடு போக்குவரத்துச் சேவைகள் இடம் பெற முடியாத வகையில் குறித்த வீதி காணப்படுகின்றது.

போக்குவரத்துச் சேவைகள் இல்லாமையினால் மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் அதிகமான மாணவாகள் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்தே பாடசாலைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கிராம மாணவர்கள் நானாட்டான் ம.வி. பாடசாலை நிர்வாகத்தினர் ஆகியோர் குறித்த வீதியை புனரமைத்து தருமாறு கோரி நானாட்டான் பிரதேச செயலாளர் மற்றும் நானாட்டான் பிரதேச சபை ஆகியோரிடம் பல தடவை நேரடியாகவும் எழுத்து மூலமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நானாட்டானில் இருந்து மடுக்கரை கிராமத்திற்குச் செல்லும் வீதியை புனரமைத்து போக்கு வரத்து வசதிகளை உடன் ஏற்படுத்தித்தருமாறு கோரி மடுக்கரை கிராமத்தில் இருந்து நானாட்டன் ம.வி. பாடசாலைக்குச் செல்லும் சுமார் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது பாடசாலை சீருடையுடன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

# தெல்.வைத்தியசாலைக்கு கணனித்தொகுதி அன்பளிப்பு



தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு கணனித் தொகுதி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜாவின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்படி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கணனித் தொகுதி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்க நிர்வாக உறுப்பினரும் வலிவடக்கு பிரதேசசபைத் தவிசாளருமான சோ.சுகிர்தன் வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் தெல்லிப்பளை ஆதார வைத் தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளருமாகிய லயன் சி.ஹரிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (63)

# வீதிப்புனரமைப்பு இல்லை சிரமத்தில் போக்குவரத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி குடியிருப்பு வீதிகள் நீண்டகாலாமாக எவ்வித புனரமைப்பும் இன்றி மிகமோசமாக சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் வீதிகள் யுத்தம் நிறைவடைந்து 5 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் இதுவரை புனரமைப்பன்றி குண்டும் குழியுமாக காணப்படுவதாகவும் இதனால் நாளாந்தம் தாம் சிரமங் களை எதிர்நோக்குவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வீதியில் மழைகாலங்களில் வெள்ள நீர் தேங்கி வீதிகள்சேறும் சகதியுமாக காணப்படுவதாக தெரிவிக்கும் இக்கிராம மக்கள் குறித்த வீதியை புனரமைக்குமாறு உரியவர்களிடம் பல தடவை கோரிக்கை முன்வைத்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மக்களின் போக்குவரத்தை கருத்தில் கொண்டு குறித்த வீதியை புனரமைக்க இனியாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# நல்லிணக்க விடயங்கள் மங்களவுடன் பேச்சு

## டுவிட்டரில் சூசன்ரைஸ்



வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன், மனித உரிமைகள், நல்லிணக்கம் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து தாம் பேச்சுக்களை நடாத்தியதாக, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நேற்று முன்தினம் வொசிங்டனில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைசை சந்தித்துப் பேச்சு நடாத்தினார்.

இந்த சந்திப்புத் தொடர்பாக, சூசன் ரைஸ் டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், தாம் இலங்கை வெளிவிவகார அமைச்சருடன், மனித உரிமைகள், நல்லிணக்கம் உள்ளிட்டவற்றின் வளர்ச்சி தொடர்பாக நல்லதொரு கலந்துரையாடலை நடாத்தியதாக தெரிவித்துள்ளார்.

மேலும், 100 நாள் செயற்றிட்டத்தின் எஞ்சிய பகுதிகள் நடைமுறைப் படுத்தப்படுவதை எதிர்பார்த்திருப்பதாகவும் சூசன் ரைஸ் குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்சிமாற்றம் ஏற்பட்ட நிலையிலும் அரசியலில் மாற்றம் நிகழவில்லை

## குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் முக்கியமான அரசியல் மாற்றங்கள் இடம்பெறவில்லை என குற்றம் சாட்டியுள்ள ஜே.வி.பி. அரசியல் ஸ்திரத்தன்மையை பெறுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் இறங்கியுள்ள அரசாங்கம் அவர்களுக்கு இலஞ்சம் வழங்குவதாக குறிப்பிட்டுள்ளது. ஜே.வி.பி.யின் மேல் மாகாண சபை உறுப்பினர் லால் காந்த இந்தக்குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

அமைச்சரவை பதவி கிடைக்காத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் கடிதமொன்றை அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் அவர்களுக்கு இரண்டு வாகனங்களும், அமைச்சர்களுக்கு வழங்கப்படும் சில சலுகைகளும் கிடைக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் முன்னர் ஒருபோதும் இவ்வாறு நடைபெற்றதில்லை. அரசியல் ஸ்திரத்தன்மையை பெறுவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை முன்னாள் ஜனாதிபதி தனது ஆட்சிக்காலத்தின் பல சந்தர்ப்பங்களில் எடுத்த நடவடிக்கைகளைப் போன்று காணப்படுகின்றது. இது தவறானது, என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மனித உரிமைகளை மதிப்பதற்கு இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது வாய்ப்பு

## அமெரிக்க வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு



இலங்கையில் பொறுப்புக்கூறல், ஊழல் ஒழிப்பு மற்றும் மனித உரிமைகளை மதித்தல் என்ற நடவடிக்கைகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கச்செயலாளர் ஜோன் கெரி குறிப்பிட்டுள்ளார்.

வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவிதத்துள்ளார்.

இதன்போது, இலங்கை அரசாங்கம், அமரிக்காவுடன் உறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

இலங்கையில் இடம் பெற்ற தேர்தல் புதிய திசையில் பயணிக்க வைத்துள்ளதாகவும், பொறுப்புக் கூறலுக்கான கதவைத் திறந்து விட்டுள்ளதாகவும், மனித உரிமைகளையும், ஜனநாயகத்தையும் காக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும், ஊழலுக்கு எதிராகப் போராடும், அரசாங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியின்போது இலங்கை அரசாங்கம் சீனாவுடன் நெருங்கிய உறவை கொண்டிருந்ததாக இங்கு சுட்டிக்காட்டிய அமைச்சர் மங்கள சமரவீர, புதிய அர சாங்கத்தைப் பொறுத்தவரையில், அமெரிக்காவை அச்சத்தோடு பார்க்காமல், அமெரிக்க உறவை சிறந்த வாய்ப்பாகவே பார்க்கிறது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை மார்ச்சில் சமர்ப்பிக்கப்படாது போனால இலங்கை இரண்டு மாதங்களுக்குள் உள்ளூர் நீதித்துறை ஒன்றை அமைத்து அதன் மூலம் குற்றவாளிகளை சட்டத்துக்கு முன் நிறுத்தும் என்று மங்கள சமரவீர, கடந்த புதன்கிழமையன்று அமெரிக்க புத்திஜீவிகளிடம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# எதிர்வரும் பொதுத்தேர்தலில் பங்கேற்கமாட்டார் பசில்

## கூறுகிறார் செனவிரட்ன



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தொடர்புபடமாட்டார் என முன்னாள் அமைச்சர் ஜோன செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளின் எந்தவொரு விடயத்திற்கும் பசில ராஜபக்சவை இணைத்துக் கொள்ளப் போவதில்லை.

கடந்த அரசாங்கத்தின் தோல்விக்கு பசில் ராஜபக்சவின் நடவடிக்கைகளும் ஏதுவாக அமைந்தது.

கடந்த காலத்தில் சில பௌத்த அமைப்புக்களின் நடவடிக்கைகளினால் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இழக்க நேரிட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகராக மகிந்த ராஜபக்சவையும் இணைத்துக் கொண்டு கட்சியை முன்னோக்கி நகர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# மகிந்த, கோத்தாவை விசாரிக்க சட்டமா அதிபரிடம் ஆலோசனை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகிய இருவரிடமும் கேள்விகளை கேட்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்காக காத்திருப்பதாக பொலிஸ் திணைக்களம் அறிவிததுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, சதி முயற்சியொன்றை மேற்கொண்டனர் என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதற்கான ஆலோசனையே பெற்றுக்கொள்ளப்பட விருக்கின்றன.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளதாவது,


இந்த விவகாரம் தொடர்பிலான விசாரணை கோப்புகள் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த கோப்புகள் மீதான அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்க, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா மற்றும் பொலிஸமா அதிபர் என்.கே. இளங்ககோன் ஆகியோரிடம் பொலிஸார் வாக்குமூலங்களை ஏற்கனவே பதிவு செய்துள்ளனர்.

இந்த சதிப்புரட்சி முயற்சியில் ஈடுபட்டதாக கூறப்படும் முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான பீரிஸிடமும் பொலிஸார் வாக்குமூலத்தைப் பெற்றுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றுவிட்டால் தேர்தல் நடைபெற்ற ஜனவரி 8ஆம் திகதி மறுநாள் புரட்சியை ஏற்படுத்தி அவ்வாட்சியை கவிழ்ப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் உள்ளிட்டோர் சதிமுயற்சிகளை மேற்கொண்டனர் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பொலிஸில் கடந்த மாதம் முறைப்பாடொன்றை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனவாதத்தை தூண்டுகிறார் விக்கி விசனம் கொள்கிறார் பொன்சேகா



இனவாதத்தை தூண்டி அதன ஊடாக நன்மை பெற்றுக்கொள்ள முயற்சிப்பது பிழையானது என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி, இனவாதத்தை தூண்டி அரசியல் இலாபங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

விக்னேஸ்வரன் அவ்வாறு செய்வது நியாயமற்றது.

மக்களுக்கு பிழையான தகவல்களை வழங்கி இலாபங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தால் விக்னேஸ்வரன் பிழை. நான் அதனை அவருக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

தரைவழிப் போரை நானே வடிவமைத்து திட்டமிட்டேன், படையணிகளுக்கு நானே உத்தரவு பிறப்பித்தேன். கீழ் மட்ட உறுப்பினர்களுக்கு நானே ஆணை வழங்கினேன். இந்தப் போராட்டத்தை நன்றாக கண்காணித்தேன்.

எனவே, மனித படுகொலைகள் இடம்பெறவில்லை என்பது எனக்குத் தெரியும்.

சிவில் மக்களை பாதுகாக்க நாம் முன்னின்று செயற்பட்டோம்.

275,000 மக்களை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்தோம்.

சிவில் போர்களின் போது பொதுமக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது என்ற போதிலும் எல்லா காரணிகளையும் கருத்திற்கொண்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்நோக்கில் போர் செய்தோம்.

விக்னேஸ்வரன் மீண்டும் இனவாதத்தைத் தூண்ட முயற்சிததால் அதனையிட்டு நான் வருந்துகின்றேன்.

வடக்கு மக்களின் நலனில் விக்னேஸ்வரன் கரிசனை கொணடிருந்தால், தெற்கு மக்களின் மனதில் சந்தேகம் எழக்கூடிய வகையில் செயற்படக் கூடாது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



வடமராட்சி அல்வாய் தெற்கு வாழ்வின் எழுச்சித்திட்டச்சங்கங்கள் அண்மையில் நடாத்திய "சாதனையாளர்" கௌரவிப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மங்கள விளக்கேற்றுவதையும், சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படுவதையும் காணலாம். (01)

# பனை அபிவிருத்திச் சபைக்கு கடந்த வருடம் அதிக வருமானம்

## சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தகவல்

யாழ்.மாவட்ட பனை அபிவிருத்திச் சபைக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு பனை உற்பத்திகள் மூலம் அதிகளவான வருமானம் கிடைத்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ம.கியூபேட் அன்ரனி தெரிவித்துள்ளார.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

பனை அபிவிருத்திச் சபையால் யாழ்மாவட்டத்துக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு 19.11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொண்டுள்ளோம்.

அதில் பனை உற்பத்திப் பொருட்கள், பதநீர் உற்பத்தி, பனம் தும்பு உற்பத்தி, விற்பனை மூலம் முன்னைய ஆண்டுகளை விட 2014 ஆம் ஆண்டு கூடிய வருமானம் கிடைத்துள்ளது.

யாழ்மாவட்டத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் 4 கற்பகம் விற்பனை நிலையத்தின் ஊடாகவும், களஞ்சியப்பகுதி ஊடாகவும் அதிக வருமானம் கிடைத்துள்ளது எனத் தெரிவித்தார்.

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சலுகை

(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் இந்த வருடம் நடாத்தப்படவுள்ள க.பொ.த.(உ/த) பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றிற்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சலுகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய சலுகையை எதிர்பார்க்கும் மாணவர்கள் விண்ணப்பப்படிவத்தை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பெலவத்தை பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோருக்கு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# தேசிய ரீதியில் பழச்செய்கை விரிவான திட்டம் முன்னெடுப்பு

விவசாயத் திணைக்களத்தினால் தேசியரீதியில் பழச் செய்கையை மேற்கொள்ள விரிவான திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பழச்செய்கை முறைமையினால் உள்நாட்டு தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்யமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாலேயே வெளிநாடுகளிலிருந்து பழவகைகளை இறக்குமதி செய்ய நேரிட்டுள்ளது.

எனவே பழச்செய்கையாளரின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் வெளிநாட்டிலிருந்து பழங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தவுமே உள்நாட்டு பழச்செய்கையை மேம்படுத்த விரிவான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கொலைவழக்கில் கைதான இளைஞர் பிணையில் விடுதலை

(திருநெல்வேலி)

கொலை வழக்கொன்றில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞன் ஒருவரின் பிணை மனுவை விசாரணை செய்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அவரைப் பிணையில் செல்வதற்கு நேற்றுமுன்தினம் அனுமதியளித்தார்.

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த 74 வயதுடைய வயோ திபப் பெண்மணியைக் கடந்த 21.05.2014 இல் கொலை செய்து அவரிடமிருந்த தங்க நகைகளை கொள்ளையடித்ததாக சு.விஜிதாஸ், ஞா.நிகேசன், தி.சதீஸ், ப.சிவபாஸ்கரன் ஆகியோர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் சதீஸ், ப.சிவபாஸ்கரன் ஆகியோர் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டனர். விஜிதாஸ் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இரண்டாவது சந்தேக நபரான கைதடி நாவற்குழியைச் சேர்ந்த ஞானசேகரன் நிகேசனின் சார்பில் அவரது சட்டத்தரணி மூலம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது விசாரணையை மேற்கொண்ட நீதிபதி அவரை 30 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் செல்வதற்கு அனுமதி வழங்கினார்.

அத்துடன் பிணையாளிகளின் இருப்பிடத்தையும், பிணைத தொகைக்கு அவர்கள் தகுதியானவர்கள்தானா என்பதை அப்பகுதிக் கிராம அலுவலர் உறுதிப்படுத்தல் வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

நாட்டைவிட்டு அவர் வெளியேறுவதைத் தடுக்கும் நோக்கில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கும் அறிவிக்க வேண்டும் எனப் பணித்ததோடு, ஒவ்வொரு மாதத்தின் கடைசியில் வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் எனவும் நீதிபதியினால் உத்தரவிடப்பட்டது.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜரானார். (137)

# நிரந்தர வைத்தியர் இல்லை சிகிச்சை பெறுவதில் மக்கள் சிரமம்

மன்னார் இரணை இலுப்பைக்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படாமையால் இங்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மடு பிரதேசசெயலர் பிரிவிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வைத்தியசாலையிலேயே மருத்துவ சிகிச்சையை பெறுகின்ற நிலையில் வைத்தியர் நியமிக்கப்படாமையால் சிகிச்சையை பெறமுடியாது தாம் வேறு வைத்தியசாலைக்குச் சென்றே சிகிச்சையை பெறும் அவலநிலை காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் அவசர நோயாளர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்கள் குழந்தைகள், வயோதிபர்கள் ஆகியோரே இதனால் வெகுவாகப் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ்வைத்தியசாலையில் கிளினிக் நோயாளர்களும் நிரந்தர வைத்தியர் இல்லாமையால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இக்கிராம மக்களின் வைத்திய தேவையை கருத்தில் கொண்டு இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

## முரசின் இன்றைய பலன்

(14.02.2015 சனிக்கிழமை)

ஜய வருஷம் மாசி மாதம் 02 ஆம் திகதி.
தசமி திதி / சித்த யோகம்.
கேட்டை நட்சத்திரம். பி.ப. 01.29 வரை. பின் மூலம்.
இராகு காலம 09.33 - 11.03 வரை. சுபநேரம 03.33 - 05.03 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
அட்டமத்துச்சனி இருப்பதினால் பொறுப்பின்றி உதவி செய்யக் கூடாது.

**ரிஷபம்**
எந்தப்பணியும் அலைச்சலின் பின்னரே வெற்றியைத்தரல்.

**மிதுனம்**
முரண்பாடு ஏற்பட்டவேளை நியாயத்தை எடுத்துரைப்பது அவசியம்.

**கடகம்**
பெற்றோரின் நோய் நிலை மனதிற்கு அச்சமூட்டுதல்.

**சிம்மம்**
பிறருடன் வீண்வாக்குவாதங்களைத் தவிர்த்து விலகிவிடல் நன்மை பயக்கும்.

**கன்னி**
அடுத்தவரின் உதவியை எதிர்பாராது காரிய சித்திக்கு பாடுபடுங்கள்.

**துலாம்**
பட்டறிவைப் பயன்படுத்தி சாதிக்கப்பாருங்கள்.

**விருச்சிகம்**
நெடுநாள் கனவு நனவாகியதினால் நிம்மதி பிறத்தல்.

**தனுசு**
குடும்பத்தவருடன் பொறுமையைக் கடைப்பிடிப்பது கவின் நிலை ஏற்படல்.

**மகரம்**
புதியன கொள்வனவு செய்ய நேரிடின் நம்பகத்தில் கண்வையுங்கள்.

**கும்பம்**
சகபாடிகளுடன் சுமுக உறவினைப்பேணி காரியத்தைச் சாதிக்கமுயலுங்கள்.

**மீனம்**
எதிர்பாராது தேக சௌக்கியம் பாதிக்கப்படும் அபாயநிலை தக்கவைத்தல்.

## பரிசுத்தொகை அதிகரிப்பு

உலக கோப்பை போட்டியின் மொத்த பரிசுத் தொகை ரூ.71 (இந்திய மதிப்பில்) கோடியாகும். இது கடந்த முறையை விட 20 சதவீதம் கூடுதலாகும்.

கோப்பையை வெல்லும் அணிக்கு ரூ.26.66 கோடியும், 2ஆவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு ரூ.12.4 கோடியும், அரை இறுதியில் தோற்கும் 2 அணிகளுக்கு தலா ரூ.4.2 கோடியும் வழங்கப்படும்.

கால் இறுதியில் தோற்கும் 4 அணிகளுக்கு தலா ரூ.2.14 கோடியும், முதல் சுற்றில் வெளியேறும் 6 அணிகளுக்கு தலா ரூ.24.80 இலட்சமும் வழங்கப்படும.

# உலகக் கிண்ணம்-2015

பிரிவு A– இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, இலங்கை, பங்களாதேஷ், நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான்

பிரிவு B– தென்னாபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே, அயர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம்

**இன்று, நாளை நடைபெறும் ஆட்டங்கள்**

**இன்று**

இலங்கை நேரப்படி அதிகாலை 03.30
நியூசிலாந்து எதிர் இலங்கை
(கிறிஸ்ட்சேர்ச்)

இலங்கை நேரப்படி காலை 09.00
அவுஸ்ரேலியா எதிர் இங்கிலாந்து
(மெல்பேர்ன்)

**நாளை**


இலங்கை நேரப்படி காலை 06.30
தென்னாபிரிக்கா எதிர் சிம்பாப்வே
(ஹமில்டன்)

இலங்கை நேரப்படி காலை 09.00
இந்தியா எதிர் பாகிஸ்தான்
(அடிலெய்ட்)



# உலகக் கிண்ண கிரிக்கெட், செய்திச் சரம்

## ட்விட்டரில் மோடி வாழ்த்து




பிரதமர் நரேந்திர மோடி உலகக் கோப்பை அணியில் இடம்பெற்றுள்ள இந்திய வீரர்கள் 15 பேருக்கும் தனித்தனியாக ட்விட்டர் மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

உங்களுக்கு இரசிகரல்லாதவர் யார் என ஜடேஜாவுக்கும், எல்லா போட்டிகளிலும் ஸ்விங் செய்யுங்கள் என புவனேஷ்வர் குமாருக்கும், உங்களது சுழல், துடுப்பாட்ட வீரர்களுக்கும் ஆச்சரியததையும், நமக்கு வெற்றியையும் அளிக்கும் என அஸ்வினுக்கும் தனித்தனியே வாழ்த்துகளை அனுப்பியுள்ளார மோடி.

## மிரட்டும் துடுப்பாட்ட வீரர்கள்



பாகிஸ்தான் முன்னாள கப்டன் வாசிம் அக்ரம் கூறியிருப்பதாவது உலகக் கோப்பை போட்டியில் தென்னாபிரிக்காவின் ஏ.பி. டிவில்லியர்ஸ், அவுஸ்ரேலியாவின் கிளென் மெக்ஸ்வெல், டேவிட்வோனர் ஆகியோர் ஆதிக்கம் செலுத்துவர்.

இந்த மூன்று வீரர்களும் நிகழ்த்தும் வானவேடிக்கை பார்வையாளர்களுக்கு பரவசத்தை ஏற்படுத்தும். எந்தவொரு பந்துவீச்சாளரும் இந்த மூவரைப் பார்த்து நடுங்குவர்.

இவர்களை ஓட்டம் எடுக்காமல் கட்டுப்படுத்துவதை விட, ஆட்டமிழக்கச் செய்வதே சிறந்தது. அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா அணிகளுக்கு கோப்பையை வெல்ல நல்ல வாய்ப்பு உள்ளது.

## மேம்படுத்தப்பட்ட இணையத்தளம்

உலகக் கோப்பைத் தொடரை முன்னிட்டு, தனது இணையத்தள பக்கத்தை மேம்படுத்தப்பட்ட வகையில் வடிவமைத்துள்ளது ஐ.சி.சி. இணையத்தள தொடர்புடன் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அதிவிரைவாக ஸ்கோர்களை நேரடியாகப் பெற முடியும்.

மேலும் பல்வேறு புள்ளிவிபரங்க ளையும் அந்தந்த நொடிகளிலேயே பெறவும், பழைய தகவல்களைப் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. இது ஓப் வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளது.

## கிளார்க் இல்லை

உலகக்கோப்பையின் இன்றைய முதல்போட்டியில் அவுஸ்ரேலியா இங்கிலாந்தை எதிர்கொள்கிறது. இப்போட்டியில் அவுஸ்ரேலிய கப்டன் கிளார்க் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. வங்கதேசத்துக்கு எதிரான போட்டியில் அவர் களமிறங்குகிறார்.

## பயிற்சிப் போட்டி ஒரு பொருட்டல்ல

பாகிஸ்தான் முன்னாள் கப்டன் வக்கார் யுனிஸ் கூறியதாவது வங்கதேசம். இங்கிலாந்துக்கு எதிரான இரு பயிற்சிப் போட்டிகளிலும் பாகிஸ்தான் வென்றுள்ளது.

அதை வைத்து ஒரு முடிவுக்கு வர முடியாது. இருப்பினும், அந்தப் போட்டியில் பெற்ற வெற்றி மனோநிலையிலிருந்து அணியினர் விலகிச் சென்று விடக்கூடாது.

அப்போட்டிகளில் பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகியவற்றில் சிறப்பாகச் செயற்பட்டதை சாதகமாக எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும்.

## ஹொட் ஸ்பொட் இல்லை

ஐசிசி சிஇஓ டேவ் ரிச்சர்ட்ஸன் கூறியதாவது முடிவுகளை மறுபரிசீலனை செய்யும் டிஆர்எஸ் முறையின் ஒருபகுதியாக ஹோட் ஸ்பொட் முறை பின்பற்றப்படமாட்டாது.

இம்முடிவில் மாற்றமில்லை. இம்முறையைப் பயன்படுத்தும் போது சில நேரங்களில் குழப்பம் ஏற்படுகிறது. ஸ்னிக்கோ (ஆர்டிஎஸ்) முறையே பின்பற்றப்படும்.

International Cricket Council

# ஒழுக்க விதிகளை மீறிய பாக்.வீரர்களுக்கு அபராதம்

(மெல்பேர்ன்)



உலக கோப்பையில் விளையாடும் 14 நாட்டு அணிகளுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாகிஸ்தானை சேர்ந்த முன்னாள் கப்டன் அப்ரிடி, தொடக்க வீரர் ஷேசாத் உட்பட 8 பாகிஸ்தான் வீரர்கள் பாதுகாப்பு விதி முறைகளை மீறியுள்ளனர்.

இந்த 8 பேரும் இரவில் நண்பர்களுடன் விருந்து சாப்பிட்டு அரட்டை அடித்து விட்டு 45 நிமிட நேரம் தாமதமாக ஹோட்டலுக்கு திரும்பி உள்ளனர். இதைத் தொடர்ந்து அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இதே மாதிரி மீண்டும் விதிமுறைகளை மீறினால் போட்டியில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று அணி நிர்வாகம் எச்சரித்துள்ளது.

ஒழுக்க விதிமுறைகளை மிறியதற்காக அவர்கள் மன்னிப்பு கேட்டுள்ளனர். அதோடு தாங்கள் அதே மாதிரியான தவறை மீண்டும் செய்ய மாட்டோம் என மன்னிப்புக் கேட்டுள்ளனர்.

# 5 உலகக் கோப்பையில் வீரர்கள்




அப்ரிடி (பாகிஸ்தான்), ஜெயவர்த்தன (இலங்கை), வெட்டோரி (நியூசிலாந்து) ஆகியோருக்கு இது 5 ஆவது உலக கோப்பை ஆகும்.

இவர்கள் இதற்கு முன்பு 1999, 2003, 2007, 2011 உலக கோப்பையில் ஆடியுள்ளனர்.

# ஒரு நாள் தரவரிசை வெளியிட்டது ஐ.சி.சி.

## ஆசிய வீரர்கள் ஆதிக்கம்



11ஆவது உலகக்கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களின் பட்டியலை ஐசிசி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

**துடுப்பாட்ட தரவரிசை:-**

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் முதலிரண்டு இடங்களில் தென் ஆபிரிக்காவின் டிவில்லியர்ஸ், ஹசிம் அம்லா நீடிக்கின்றனர்.

3ஆம் இடத்தில் இந்தியாவின் விராட் கோஹ்லி, 4ஆம் இடத்தில் இலங்கையின் குமார் சங்கக்காரா, 5 ஆம் இடத்தில் இலங்கையின் திலகரட்ன டில்ஷான், 6 ஆம் இடத்தில் நியூசிலாந்தின் கனே வில்லியம்சன், 7ஆம் இடத்தில் இந்தியாவின் ஷிகர் தவான், 8ஆம் இடத்தில் நியூசிலாந்தின் ரோஸ் டெய்லர், 9ம் இடத்தில் இந்தியாவின் மகேந்திர சிங் டோனி உள்ளனர்.

**பந்துவீச்சு தரவரிசை:-**

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் முதலிடத்தில் பாகிஸ்தானின் சயீத் அஜ்மல், 2ம் இடத்தில் மேற்கிந்திய தீவுகளின் சுனில் நரைன், 3ம் இடத்தில் தென் ஆப்ரிக்காவின் ஸ்ரெய்ன் உள்ளனர்.



4ஆம் இடத்தில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன், 5ஆம் இடத்தில் அவுஸ்ரேலியாவின் மிச்செல் ஜோன்சன், 6ம் இடத்தில் வங்கதேசத்தின் ஷகிப் அல்ஹசன், 7ஆம் இடத்தில் அவுஸ்ரேலியாவின் மிட்செல் ஸ்டார்க், 8ஆம் இடத்தில் இலங்கையின் ரங்கன ஹேரத், 9ஆம் இடத்தில் மொஹமட் ஹபீஸ் உள்ளனர்.

# டயமன்ஸ் இளைஞர் கழக அணி எல்லே போட்டியில் சம்பியனானது



(கரவெட்டி)
கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டு நிகழ்வில் எல்லே போட்டியில் பெண்களில் டயமன்ஸ் இளைஞர் கழக அணி சம்பியனாகியுள்ளது

ஆண்கள், பெண்களுக்கான எல்லே போட்டிகள் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

4 அணிகள் பங்குபற்றிய பெண்களுக்கான எல்லே இறுதிப்போட்டியில் டயமன்ஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து மனோகரா இளைஞர் கழக அணி மோதியது.

ஆட்டநேரத்தில் இரு இளைஞர் கழக அணிகளும் தலா 1 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தன.

மேலதிகமாக வழங்கப்பட்ட 10 பந்துகளிலும் இரு இளைஞர் கழக அணிகளும் எவ்வித ஓட்டங்களையும் பெறவில்லை.

இதனையடுத்து நாணயச் சுழற்சியின் மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்பட்டு டயமன்ஸ் இளைஞர் கழக அணி சம்பியனாகியது.

# இல்ல மெய்வல்லுநர்

(பருத்தித்துறை)
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மென்வன்மைப் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ரீ.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கல்லூரியிலிருந்து அண்மையில் இளைப்பாறிய பிரதி அதிபர் எஸ்.அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். திருமதி வசந்தாதேவி அருளானந்தம் பரிசில்களை வழங்கவுள்ளார். (01)

(பருத்தித்துறை)
தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் ஏ.சிவநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இம் மெய்வல்லுநர் போட்டியில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார் திருமதி சறோஜினிதேவி இராஜேந்திரன் பரிசில்களை வழங்கினர். (01)

பருத்தித்துறை தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி தீபஜோதி விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் திருமதி சத்தியபாமா நவரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இம்மெய்வல்லுநர் போட்டியில் வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி பீ.கமலாம்பாள் பிரதம விருந்தினராகவும், வைத்தியகலாநிதி ஆ.ஜெயேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (01)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இரா.ஸ்ரீநடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ஆர்.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# சதுரங்கப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)
இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் ஆரம்ப நிலையினருக்கான சதுரங்கப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டியில் ஆண், பெண இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களுடன் போட்டிக்கான கட்டணமாக 400 ரூபாவுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் காலை 9 மணிக்கு பின்னர் போட்டியில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (48)

# வல்வை ஆதிசக்தி, உடுப்பிட்டி யூத் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின



(யாழ்ப்பாணம்)
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடாத்தும் Jaffna Challengers கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி-2015 இன் ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி வி.கழகத்தை எதிர்த்து சிறீ அம்பாள் வி.கழகமும், உடுப்பிட்டி யூத் வி.கழகத்தை எதிர்த்து வலிகாமம் கலைமகள் வி.கழகமும் மோதியது.

முதலாவதாக நடைபெற்ற போட்டியில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமரபாகு சிறீ அம்பாள் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வலிகாமம் கலைமகள் விளையாட்டுக்கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் ஆட்ட நேரம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் நடுவர்களினால் தண்ட உதை வழங்கப்பட்டது.

தண்ட உதையில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

# பிற்போடப்பட்டது மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)
யாழ்.கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் இடம்பெறவிருந்த நிலையில் மறு அறிவித்தல் வரும் வரை பிற்போடப்பட்டுள்ளதாகக் கலாசாலையின் அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கோப்பாய் கைதடி வீதி வளைவில் இடமபெற்ற விபத்தொன்றில் விளையாட்டுப் போட்டிக்கான ஆயத்த வேலைகளை முடித்த பின் வீடு திரும்பிக் கொண்டிருந்த கலாசாலையில் கல்வி பயிலும் உடற்கல்வி ஆசிரிய மாணவன் எஸ்.றீகன் உயிரிழந்தமையே போட்டி பிற்போடப்பட்டமைககான காரணமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.








கொம்மாந்துறை யா/ கம்பர்மலை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் ரவீந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நந்தகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர் - வடமாரட்சி) கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். இவ் விளையாட்டுப்போட்டியில் இல்லங்களின் ஆண்கள், பெண்களுக்கான அணிநடை, மைதான நிகழ்வான குண்டெறிதல், தட்டெறிதல் என்பனவும், சுவட்டு நிகழ்வுகளான ஓட்டம், தடைஓட்டம், இல்ல அஞ்சலோட்டம், சிறுவர்கள் விளையாட்டு போன்ற பல போட்டிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. மேலும் கீழ்ப்பிரிவு மற்றும் மேல்பிரிவு மாணவிகளின் இசையும் அசைவும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அத்துடன் பழைய மாணவர்களுக்கான போட்டிகளும் நடைபெற்றன.

# அரசாங்கம் நம்பிக்கையை பாதுகாக்குமா?

- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து-



தற்போதைய எதிர்க் கட்சிகள் பெரும் நெருக் கடியை எதிர்நோக்கி இருக்கின்றன. அவர் களால் அரசாங்கத்தை விமர்சிக்கவும் முடியாது. அதனை ஆதரிக்கவும் முடியாது. கூடுதலாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களைக் கொண்ட தற்போதைய அரசாங்கத்தை விமர்சிக்காமல் இருந்தால் அவர்கள் அடுத்த பொதுத் தேர்தலை எதிர்நோக்க முடியாது. அரசாங்கத்தின் குறைகளை காணாது மக்களை மீண்டும் தம் பக்கம் வென்றெடுக்க முடியாது.

ஆனால், அரசாங்கத்தின் தலைவராக இருப்பவர் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்பதால் அவர்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கவும் முடியாது.

உதாரணமாக இம் முறை வரவு செலவுத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். இந்த வரவு செலவுத் திட்டத்தால் மக்களுக்கு பெருமளவு சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன. எனவே எதிர்க்கட்சி கள் அதனை விமர்சிக்க முடியாது. அதனை விமர்சிக்காது மக்களை வென்றெடுக்கவும் முடியாது.

ஆனால் இது ஜனாதிபதி சிறி சேன, கடந்த ஜனாதிபதித் தேர்த லின் போது வாக்குறுதியளித்த வரவு செலவுத் திட்டமாகும். அவர் இப்போது பிரதான எதிர்க்கட்சி யின் தலைவராக இருக்கிறார். அதனாலும் எதிர்க்கட்சிகள் அதனை விமர்சிக்க முடியாது.

எனவே, இப்போது அரசாங் கத்தை விமர்சிக்கும் பொறுப்பை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருக்கும் சிறு கட்சிகளான தினேஷ் குணவர்தனவின் ஐக்கிய மக்கள் முன்னணி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகள் ஏற்றுள்ளன. அதேவேளை அவர்கள் மதிந்தவை மீண்டும் பதவியில் அமர்த்த உத்திகளையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்காக அவர்கள் வாசுதேவ நாணயக்காரவின் கட்சி போன்றவற் றோடு இணைந்து புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க முயற்சிப்ப தாகவும் செய்திகள் கூறுகின்றன.

தென்பகுதி மக்கள் தற்போதைய அரசாங்கம் தொடர்பாக மகிழ்ச்சியுறு வதற்கு முக்கிய காரணம் கடந்த 29ஆம் திகதி நிதி அமைச்சர் சமர்ப் பித்த குட்டி வரவு - செலவுத் திட்டமாகத் தான் இருக்க வேண்டும். இது எதிர் வரும் ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலை நோக்காகக் கொண்டு முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் என விமல் வீரவன்ச கூறியிருந்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை அடுத்து, இதே அரசாங்கம் பத விக்கு வந்து விலைவாசியை அதிகரித்தால் வீரவன்ச கூறுவது உண்மையாகிவிடும். அரசியலில் எதனையும் எதிர்பார்க்கலாம்.

அமைச்சரவைக்கு அப்பால் தேசிய கொள்கை வகுப்புக்காக புதிய அரசாங்கம் தேசிய நிறை வேற்றுச் சபை என்றதோர் சபையை அமைத் துள்ளது. அதில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் களும் அங்கம் வகிக்கிறார்கள். இவை தமிழ் அரசியல்வாதிகளுக்கு கிடைத்த அங்கீகாரங்களாகும்.

ஆனால், அரசாங்கம் வாக்குறுதிய ளித்தபடி தொடர்ந்தும் மக்கள் மகிழ்ச் சியடையும் வகையிலேயே நிகழ்வுகள் இடம்பெறுமா என்பதே இப்போது மக்கள் முன் உள்ள கேள்வியாகும்.

ஊழல்களை ஒழிப்பது சம்பந்தமான அரசாங்கத்தின் வாக்குறுதியைப் பற்றியே மிகவும் கூடுதலாக சந்தேகிக்க வேண்டியுள்ளது. இதற்கு முன்னர் அமைச்சர்களாக இருக்கும் போது மாபெரும் ஊழல்களில் ஈடுபட்ட தாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சிலர், இந்த அரசாங்கத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தில் முக்கிய இடங்களை கைப்பற்றிக்கொண்டிருக் கும் போது, ஊழல்களை ஒழிக்க முடியுமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

சில சட்டத்தரணிகள் சாதாரண மக்களின் வழக்குகளுக்காக நீதிமன்றங் களில் ஆஜராவதில்லை. அவர்கள் ஒரு வழக்குக்காக ஒரு நாள் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு சுமார் 1 இலட்சம் ரூபாய் அறவிடுகிறார்கள். அவ்வாறான வர்கள் அந்தத் தொழிலை ஒரு பக்கம் வைத்துவிட்டு அரசியலில் குதிக்கிறார் கள். அது ஏன் என்பதும் அவ்வாறான வர்கள் தாம் இழந்த வருமானத்தை அரசியல் மூலம் தேட முயற்சிக்க மாட்டார்களா என்பதும் நல்லாட்சிக்கான எதிர்பார்ப்புக்களை சற்று சிதறடிக்கின்றது.

அரசாங்கம் எதிர்காலத்தில் பொரு ளாதார நெருக்கடிகளை சந்திக்கும் போது அதனால் மக்களின் கவனத்தை திசை திருப்ப வேண்டும் என்று அரசாங்கம் கருதும் போது நாம் எதிர்பாராதவையும் இடம்பெறலாம்.


புதிய அரசாங்கத்தின் 100 நாள் திட்டம் முடிவடைந்தவுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றம் கலைக் கப்படும் என்று பிரதமர் விக்கிரமசிங்க அண்மையில் கூறியிருந்தார். அதே வேளை, அமைச்சர் ஜோன் அமரதுங்க வுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் சமர்ப் பித்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை யில் அரசாங்கம் தோல்வியடைந்தால் உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப் படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பொதுத் தேர்தல் நடைபெற்றால் அது சிறுபான்மையினருக்கு சிக்கலானதாக முடிவாவது நிச்சயம். ஏனெனில் சிறு பான்மை மக்களின் வாக்குகளால் பதவிக்கு வந்த ஜனாதிபதி சிறிசேன, பொதுத் தேர்தலின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை தாங்குகிறார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அம்மக்கள் விரும்பிய ஐ.தே.க., அவரது கட்சிக்கு எதிராகப் போட்டியிடப் போகிறது.

# ஆண்பாலாகிய நிலவு

கமலஹாசன் நடித்த "பம்மல் கே சம்பந்தம்" திரைப்படத்தில் தேவாவின் இசையில் வெளிவந்த "சகலகலா வல்லவனே சலவை செய்த சந்திரனே" பாடலைக் கேட்ட பொழுது கவிஞர் வாலியும் கவியரசு கண்ணதாசனும் நிலவு குறித்து தத்தமது பாடல்கள் வாயிலாக சர்ச்சையில் ஈடுபட்டது நினைவுக்கு வந்தது.

பொதுவாக இலக்கியத்திலும் சரி சினிமாவிலும் சரி கவிஞர்கள் பெண்ணைத்தான் நிலவுக்கு ஒப்பிட்டுப் பாடல்களும் கவிதைகளும் புனைந்திருப்பார்கள். ஆனால் கவிஞர்



வாலி "எங்க வீட்டுப் பிள்ளை" திரைப்படத்தில் எழுதிய பாடல் ஒன்று தான் "அவன் ஒரு நிலவு" என்ற பாடல். சரோஜாதேவி எம்.ஜி.ஆரை நினைத்துப் பாடுவதாக அமைந்த இந்தப்பாடல் துரதிஸ்டவசமாக திரைப்படத்தில் இடம்பெறவில்லை. இந்தப்பாடலில் உள்ள சிறப்பு என்னவெனில் இந்தப்பாடலில் நிலவை ஆண்பாலாக்கி இருப்பார் கவிஞர் வாலி.

இந்தப் பாடலைப் பற்றிக் கேள்விப்பட்ட கண்ணதாசன் வாலியைப் பார்த்து "சந்திரனை நீ எப்படி ஆண்பாலாக்குவாய்" என்று கேட்டுள்ளார். அதற்கு வாலி நீங்களே ஒரு திரைப்படத்தில்

"பகலிலே சந்திரனைப் பார்க்கப் போனேன்
அவன் இரவிலே வருவதாக ஒருத்தி சொன்னாள்"

என்று ஒரு பெண் பாடுவதாக பாடல் எழுதி உள்ளீர்களே என்றதற்கு, கண்ணதாசன் அது படத்தில் வருகின்ற நாயகனின் பெயர் சந்திரன் என்பதால் அவ்வாறு எழுதியதாகக் கூறியிருந்தார்.

அதுபோல வைரமுத்து "சகலகலா வல்லவனே சலவை செய்த சந்திரனே" பாடலிலும் கதாநாயகனை "சலவை செய்த சந்திரனே" என்று வர்ணித்துப் பாடல் எழுதியுள்ளார்.

வைரமுத்து சந்திரனை சலவை செய்வதாய் பாடல் புனைந்தது இது முதற் தடவை இல்லை. முன்னதாக "பயணங்கள் முடிவதில்லை" திரைப்படத்துக்காக அவர் எழுதிய "இளைய நிலா பொழிகிறதே" பாடலின் பல்லவியை முதலில் அவர் "சலவை நிலா பொழிகிறதே" என்று எழுதிக் கொடுத்துள்ளார். ஆனாலும் நிலவை சலவை செய்ய இயக்குநருக்கும் வேறு சிலருக்கும் பிடிக்கவில்லை என்பதனால் இறுதியாக "இளைய நிலா பொழிகிறதே" என்று மாற்றியதாக "மௌனத்தின் சப்தங்கள்" நூலில் வைரமுத்து குறிப்பிட்டிருந்தார்.

- சி.விமலன் -




# வியாழன் கிரகத்தின் முகத்தில் கரும்புள்ளி?

வியாழன் (Jupiter) கிரகம் இப்போது பூமியிலிருந்து சுமார் 65 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. வியாழன் கிரகத்தின் "முகத்தில்" நீங்கள் மூன்று "கரும்புள்ளி" களைக் காணலாம். உண்மையில் அவை கரும்புள்ளிகள் அல்ல.

மூன்று கரும்புள்ளிகளில் ஒன்று வியாழன் கிரகத்தைச் சுற்றி வருகின்ற துணைக்கோள்களில் (சந்திரன்கள் என்றும் சொல்லலாம்) ஒன்றான காலிஸ்ரோ (Callisto). அதனுடைய நிழல் வியாழன் கிரகத்தின் மீது விழுவதால் அந்த நிழலானது கரும்புள்ளி போன்று தென்படுகிறது.

யூரோப்பா (Europa) துணைக்கோள் இடது புறத்தில் விளிம்பில் தென்படுகிறது. அதன் நிழல் தனியே கரும்புள்ளியாகக் காணப்படுகிறது.

துணைக்கோள்களில் மற்றொன்றான அயோ (Io) மேற்புறத்தில் தென்படுகிறது.

இந்த மூன்று துணைக்கோள்களுமே தனித்தனி நிறம் கொண்டவை. காலிஸ்ரோ பழுப்பு நிறம் கொண்டது. யூரோப்பா வெண்மை நிறத்தில் காட்சி அளிப்பதாகும். அயோ செம்மஞ்சள் நிறம் கொண்டது.

இப்படம் சுமார் 550 கிலோ மீற்றர் உயரத்தில் இருந்தபடி பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கின்ற ஹப்பிள் ரெலஸ்கோப் (Hubble Telescope) கடந்த ஜனவரி 24 ஆம் திகதி எடுத்தவை. பறக்கும் ரெலஸ்கோப் எனப்படும் ஹப்பிள் ரெலஸ்கோப் 1990 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகிறது.

வியாழன் கிரகத்தை 67 துணைக்கோள்கள் சுற்றி வருகின்றன. அயோ, யூரோப்பா, காலிஸ்ரோ அவற்றில் அடங்கும். அயோ ஒரு தடவை வியாழனை சுற்றி வர சுமார் ஒன்றரை நாட்கள் பிடிக்கிறது. யூரோப்பா சுமார் நான்கு நாட்களுக்கு ஒரு முறையும் காலிஸ்ரோ 16 நாட்களுக்கு ஒரு முறையும் வியாழனைச் சுற்றி வருகின்றன. ஆகவே இந்த மூன்றும் வியாழன் கிரகத்தின் "முகத்தில்" அருகருகே காணப்படுவது ஓரளவில் அபூர்வமே. அந்த வகையில் இப்படமும் அபூர்வமானது.

இப்போது வியாழன் கிரகத்தை இரவு வானில் எளிதில் காணலாம். சூரியன் அஸ்தமித்த பின்னர் கிழக்கு வானில் வியாழன் தென்பட ஆரம்பிக்கும். இரவு 9 மணி அளவில் கிழக்கு திசையில் நோக்கினால் சற்று உயரத்தில் வியாழன் தெரியும். அதற்குக் கீழே ஓரளவு பிரகாசமான நட்சத்திரம் தெரியும். அது தான் மக நட்சத்திரமாகும். ஆங்கிலத்தில் அது Regulus என்று அழைக்கப்படுகிறது.

- என்.ராமதுரை -

# காதலுடன் ஒரு சொற்றாடல்

– சித்தகவி –


காதலுக்கான விதைகள் எல்லா உயிர்களிலும் உறைந்து கிடக்கிறது. இது ஒரு மரபணுவுடன் (Genetics) தொடர்புள்ள விஷயம்தான் என்பதில் ஐயமில்லை. காதல் விதைகள் முளைக்கவும், முளைக்காமல் மக்கி மடியவும், நிறைய இடம், பொருள், காலம், சமூக, பொருளாதார, கலாசார சூழ்நிலைகள், ஏன் அரசியல் காரணங்கள் கூட உண்டு.

காதலுக்கு தடைக்கற்கள் எவ்வளவோ, அதே அளவு உண்மையான காதலுக்கு, வயதோ, வகுப்போ, சாதியோ, மதமோ, உறவு முறைகளோ, நிறுவன அமைப்புகளோ (திருமணம் உட்பட) ஒரு வரம்பாக இருக்க முடியாது என்றே தோன்றுகிறது. இயற்கை விதிகளின் படி எந்த ஒரு வரம்பும் காதலுக்கு இல்லை என்றே தோன்றுகிறது.

மனித காதல் ஒரு புரியாத புதிர்தான். காதலை அறிவியல் நோக்குடன் தெரிந்து கொள்ளுதல் முடியாத காரியம் என்றே தோன்றுகிறது. காதல் வெறும் சுரப்பிகள் (Harmones related issue) சம்பந்தமான விஷயம்தான். காதலுக்கு பல தோற்ற காரணங்களும், கணங்களும், இடங்களும் உண்டு.

உடல் கவர்ச்சியாகவோ, அன்பை நாடியோ, அழகியல் பொருத்தத்தினாலோ, புரிதல் மற்றும் அறிதல் தொடர்பான விருப்பங்களாலோ, கொள்கை ரீதியான விருப்பங்களாலோ, பொருளாதார நெருக்கடிகளினாலோ, சந்தர்ப்ப வசத்தினால் ஏற்படும் திடீர் இணைவுகளினாலோ, ஏதோ ஒரு (அல்லது) பல காரணங்களால் ஒருவர் மட்டுமோ (ஒருதலைக் காதல்) அல்லது இருவரும் சேர்ந்தோ மனத்தில் ஒருவரை ஒருவர் இருத்திக்கொள்வதில்தான் காதல் தொடங்குகிறது.

ஒலி அலைகளினாலும், ஒளிக்கதிர்களினாலும், ஈர்ப்பு விசையினாலும், காந்த சக்தியினாலும், காலம் மற்றும், இடம் சந்தர்ப்பச் சேர்க்கையினாலும் காதல் ஒருதலையாகவோ, இருபக்க காதலாகவோ துவக்கப்படுகிறது.



இந்த காதலுக்கான தேடலும், காதலரை கண்டுகொள்ளுதலும், அவர் நலனில் அக்கறை கொள்ளுவதும் மரபணுவிலேயே முன்நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றே தோன்றுகிறது. மோகம், காமம் மட்டுமல்லாது, ஆன்மிகம் மற்றும் தெய்வீகத்தன்மையும் காதலின் முக்கிய பரிமாணங்கள்தான்.

காதல் பலருக்கு தன்மயமாக் கலுக்கான விளைவாகவே (egotic fulfilment) இருப்பினும், உண்மையான ஆழமான காதல் சுயமகிழ்ச்சிக்காகவோ அல்லது ஆன்மிக முதிர்ச்சியினாலோ விட்டுக்கொடுத்தல் (selfless-ness) என்ற மன நிலைக்குத்தான் ஒருவரை இட்டுசெல்ல முடியும்.

ஒருவர் ஒரே சமயத்திலோ, அடுத்தடுத்தோ, ஒன்றுக்கு மேற்பட்ட சிலரை காதலிக்க முடியும் என்றே தோன்றுகிறது. காதல் ஒற்றைப் பொருத்தத்தை நாடிய தேடலோ அல்லது முடிவற்ற தேடல்களோ அல்ல.

ஏன் பலரைக்கூட ஒரே காலத்தில் காதலிக்கலாம் தான். ஆனால் அன்பை வழங்குவதற்கு தேவையான கால, இட வரம்புகளினால்தான் பலரை காதல் செய்ய முடிவதில்லை. இதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடுகள் உண்டா தெரியவில்லை. மரபணு மற்றும் உளவியல் அடிப்படையில் ஒன்றுக்கு மேல் சிலரை காதலிப்பதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடுகள் உண்டா?

ஞான முதிர்ச்சியும், தெளிவும் இருந்தால் ஒன்றுக்கு மேற்ப்பட்ட ஆத்மார்த்த மான காதல் உறவுகள் சாத்தியமே. தமிழ்க்கடவுள் முருகனுக்கு தெய் வானைதான் வள்ளியை கைப்பிடித்து கொடுக்கிறாள். உடல் ரீதியான ஒன்றுக்கு மேற்பட்ட காதல் மற்றும் திருமண உறவுகள்? அவரவர் விருப்பம் தான். சட்டமும், கலாச்சார நிறுவன்ங்களும் தடுக்காமல் இருந்தால் சரிதான்?

காதல் உடலுறவு மற்றும் திருமணத்துடனும் இணைத்துப் பேசப்படுவதால் பெரும் குழப்பம் பலருக்கு. காதல், உடலுறவு, திருமணம் இம்மூன்றும், தனித்தனியாகவும், சேர்ந்தோ இயங்க முடியும். உடலுறவும், திருமண பந்தம் இன்றியும் காதல் மட்டும் தனித்து இயங்க முடியும். காதல் இல்லாத உடலுறவும் திருமண பந்தமும் அன்றாட வாழ்வில் காணக்கூடியதே. இம்மூன்றும் வாழ்நாள் முழுவதும் காதலர்களுக்கு சேர்ந்தியங்கினால் மகிழ்ச்சியான விஷயம்தான். நடைமுறையில் இதற்கு எவ்வளவு சிக்கல்கள்?

காதல் ஒன்றுதான் எளிதில் அடையக்கூடிய ஆன்மிக விசையாக, சக்தியாக பலருக்கும் இருக்கிறது. இதன் மூலம்தான் மனிதன் இயற்கை, விடுதலை, பேரன்பு, அழகு, உண்மை, கருணை, ஞானம், பக்தி, மற்றும் இருத்தலின் கணங்களை முழுவதும் எளிதில் உணரமுடியும் என்று தோன்றுகிறது.

## காதலில் ஆறு வகை! அதில் உங்கள் காதல் எது?

"காதல்" இல்லாமல் இளமை இனிக்காது. காதலுடன் "அவனும், அவளும்" பார்க்கும் பார்வையில்தான் எத்தனை அர்த்தங்கள். பிடித்தமான வரை கவர்ந்துவிடுவதற்காக இளமை செய்யும் லீலைகள்தான் எத்தனை எத்தனை?

கூந்தலில் இருந்து தவறி விழும் பூக்களை சேகரிப்பது, குட்டிக்கரணம் அடிப்பது, கலையாத தலையை கலைத்து விட்டு சீவிக் கொள்வது, சோகமாக இருக்கும் முகம் இணையைக் கண்டதும் மலர்ந்துவிடுவது என எத்தனை "ரொமான்டிக்" காட்சிகள் ஒவ்வொரு இளையரின் வாழ்விலும்.


அப்படி, நீங்களும் காதல் வயப்பட்டிருக்கலாம். உங்கள் "ரொமான்டிக்" செயல்களை ஆய்வாளர்கள் பட்டியலிட்டு உங்கள் காதல் எத்தகையது என்பதை விவரிக்கிறார்கள் இங்கே"

### மன்மதன் காதல்

காதல் பாடல் பாடிக் கொண்டிருக்கிறீர்களா? அதிலும் உணர்ச்சி ஊட்டும் வரிகளை அழுத்தமாக உங்கள் உதடுகள் உச்சரிக்கிறதா? அப்படியெனில் உங்களுக்கு காதல் உணர்வுகள் அதிகம்.

உங்கள் கட்டுக்கடங்காத விருப்பத்தை பூர்த்தி செய்வதற்காக காதலன்/காதலியின் விருப்பத்தை எதிர்பார்த்து பாடலாக பாடி அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

இந்த வகையில் உள்ள ஒரே ஒரு குறைபாடு காதலர் இருவரில் ஒருவரது ஆதிக்கம் அதிகமாக இருக்கும். ஆனாலும் உங்களுக்குள் நல்ல புரிதலும், மற்றவர் விருப்பத்துக்கு அப்படியே இணங்கி விட்டுக் கொடுத்தலும் நிகழும். இப்படி தீவிர காதலுணர்வு கொண்ட காதலர்கள் மகிழ்ச்சியாகவும், கவர்ச்சியாகவும் தோன்றுவார்கள்.



### கவன ஈர்ப்புக் காதல்

நீங்கள் காதலிப்பவரை தினமும் பார்க்கிறீர்கள். ஓரளவுதான் பழக்கம். ஆனால் நெருக்கமில்லை. மற்றவர்களோடு கூட்டத்தோடு கூட்டமாக மட்டுமே சந்திக்க முடிகிறது. அப்போது அவனை/அவளை கவருவதற்காக, அவன்/அவள் விரும்பும்படியாக அல்லது கேட்கும் படியாக பாடுவது, பேசுவது என்று கவனத்தை ஈர்க்க முயற்சி செய்கிறீர்களா? உங்கள் பேச்சை அவர் ரசித்து புன்னகைக்கிறார். ஆனால் பதில் எதுவும் சொல்வதில்லை. இப்படி இருக்கிறதா? உங்கள் நிலைமை.

இதனை "கவனஈர்ப்பு காதல்" என்கிறார்கள். இது முழுமையான காதல் அல்ல. உங்களுக்குள் காதல் உணர்வுகள் நிரம்பி இருக்கிறது. ஆனால் மற்றவருக்குள் அதேயளவு இருக்காது. நிலைமை இப்படி இருந்தாலும் இருவருமே ஒருவரையொருவர் ரசிப்பீர்கள். இது பொழுதுபோக்கு காதலென்கிறார்கள் ஆய்வாளர்கள்.

### சேமிப்புக் காதல்

அவன்..அவள் மீது அன்பு, அக்கறை, மரியாதை எல்லாமே இருக்கிறது. இளமையின் குறுகுறுப்பு இல்லாத பார்வையே பார்க்கிறீர்கள். பேசவும் செய்கிறீர்கள். அதில் உள்ளர்த்தமோ, ரகசியமோ எதுவுமில்லை. இருவரும் அப்படியேதான் பழகுகிறீர்கள். இப்படிப்பட்ட காதலை, "சேமிப்பு காதல்" என்று வகைப்படுத்துகிறார்கள்.

கிட்டத்தட்ட இது ஆழமான நட்புணர்வே. இருவரும் ஆழமான அன்பு வைத்திருப்பவர்கள். காதலைச் சொல்ல முடியாத, சொல்ல விரும்பாத அளவுக்கு நேசம் வைத்திருப்பீர்கள். நீங்கள் விரும்பினால் இந்த நட்பை வாழ்க்கை முழுவதும் நீடிக்கவும் செய்யலாம்.

### திட்டக் காதல்

"உங்களை பிடித்திருக்கிறது" என்று உங்கள் காதலன்/காதலி சொல்லிவிட்டார். உங்களுக்கும் அவரைப் பிடித்திருக்கிறது. நன்றாகவே பேசிக் கொள்கிறீர்கள். ஆனால் எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் எல்லை மீறல் இல்லவே இல்லை. பிரச்சினையைப் பற்றி பேசுகிறீர்கள், உங்கள் குறையை அவரும், அவரது குறையை நீங்களும் சுட்டிக்காட்டி பேசிக் கொள்கிறீர்கள், முரண்பாடு ஏற்பட்டாலும் முட்டிக் கொள்வதில்லை"!

இது "திட்டக் காதல்". வாழ்வின் போக்கை புரிந்து கொண்டு ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்து முடிவெடுக்கவும், வாழவும் விரும்பும் ஜோடி நீங்கள். உங்கள் உணர்வுகளும் கூட எல்லைக்குட்பட்டதுதான். உங்கள் அன்பும் என்றும் நீடித்திருக்கும்.

### இனிப்பு காதல்

அடிக்கடி தீண்டிக் கொண்டும், சீண்டிக் கொண்டும் இருப்பார்கள் சில காதலர்கள். பெரும்பாலும் சீண்டல்கள் எல்லைமீறும். இருந்தாலும் ஒருவரை ஒருவர் தடுப்பதில்லை. அந்த சீண்டலை அனுமதிக்கிறீர்கள்.

இதனை "இனிப்பு காதல்" என்று வகைப்படுத்துகிறார்கள். இவர்களுக்குள் ஆழமான காதல் உணர்வு இருக்கும். அதிக உணர்ச்சி கொண்டவராகவும், கொஞ்சம் கூச்சம் உடையவராகவும் இருப்பார்கள்.

இவர்கள் காதலில் காமம் கலந்திருப்பதால், ஒருவரின் தீண்டலை இன்னொருவர் தடுக்கமாட்டார். இவர்களுக்குள் தன்னைப்பற்றிய உயர்வான எண்ணமும், சில ஒளிவு மறைவு ரகசியங்களும் இருக்கும். ஆனால் காதலை கடைசிவரை விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

### வெற்றிக் காதல்

போனில் பேசும்போது லேசாக இருமும் சத்தம் கேட்டால் போதும் உடனே அலுவலகத்துக்கு விடுமுறை எடுத்துக்கொண்டு காதலன்/காதலியை நேரில் பார்க்க கிளம்பிவிடுகிறீர்களா? விளையாட்டுக்காக "உடனே பார்க்க வேண்டும் போலிருக்கிறது வருவாயா?" என்றால் என்ன வேலையிருந்தாலும் லீவு போட்டுவிட்டு போய் தரிசனமாகி விடுகிறீர்களா? இதுபோன்ற ஆழ்ந்த காதலை அவரும் உங்களிடம் வைத்திருக்கிறாரா?

உங்கள் காதல் மற்றவர்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு சக்தி வாய்ந்தது. இதனை "வெற்றிக் காதல்" என்கிறார்கள். இப்படிப்பட்ட காதலர்கள் ஒருவருக்கொருவர் எதையும் விட்டுக்கொடுக்க தயாராக இருப்பார்கள். பிரச்சினை என்றால் தன்னையே தரவும் தயாராவார்கள்.

(நன்றி: மின்னல்)

# புதிர்ப்போட்டி இல. 27

பாடல்: 1

டா டா டா டா டா டா அது

டா டா டா டா டா டா டா டா டா டா மாட்டை

இதில் முதல்வரியில் ஆறுடா உள்ளது. இரண்டாவது வரியில் பத்துடா உள்ளது. அதாவது ஆறுடா அது, பத்துடா மாட்டை என்பது ஆறடா அங்கே பத்துடா மாட்டை என்பது போன்று சிறுவர் விளையாட்டுப் புதிர்ப்பாடல்கள் உள்ளன.

பாடல்:2

தலையில் எட்டு

இடையில் ஐந்து

கடையில் மை

எல்லாம் சேர்ந்தால் மேன்மை அ:.து என்ன?

இதற்கு விடை "அருமை"

பாடல்:3

ஈராறும் ஈரறையும் இல்லையென்றேன் ஆதலினால்

ஈராறு செல்லாது இருந்தீரே - ஈராறு

கட்டி அணைத்தேநீ காதலுடன் சேர்ந்தாலே

வட்டியுடன் தானே வரும்.

இதற்கு என்ன பொருள் தெரியுமா?

2 x 6 = 12 + 2 x 1/2 = 12 + 1 = 13

13 ஆவது நட்சத்திரமாகிய அத்தம் (பொருள்)

2 x 6 = 12 ஆவது நட்சத்திரமாகிய உத்திரம் (மறுமொழி)

2 x 6 = 12 ஆண்டில் பன்னிரண்டாவதான வெகுதான்ய (நெல்)

நட்சத்திரக் கணக்கு போடுவது போல இப்பாட்டின் ஆசிரியர் சுந்தரக் கவிராயர், செல்வர் இயல்பை வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடிக் காட்டுகிறார். பதின்மூன்று நட்சத்திரமாகிய அத்தம் (அதாவது பொருள்) என்னிடத்தில் இல்லையென்று நான் சொன்னபடியால் பன்னிரண்டாவது நட்சத்திரமாகிய உத்திரம் (மறுமொழி) உரையாது இருந்தீரே. ஆண்டில் பன்னிரண்டாவதாகிய வெகுதான்யத்தை (மிகுந்த நெல்லை) மூட்டை மூட்டையாகக் கட்டி அவற்றை ஆசையுடனே சேர்த்து வைத்தால் பொருள் வட்டியுடன் தானே வரும் என்பது இப்பாட்டின் பொருள்.

பாடல்:4

"முற்பாதி போய்விட்டால் இருட்டேயாகும்
முன் எழுத்து இல்லாவிட்டால் பெண்ணேயாகும்.
பிற்பாதி போய்விட்டால் ஏவற் சொல்லாம்
பிற்பாதியுடன் முன் எழுத்து இருந்தால்
மோகம் சொற்பாகக் கடைதலைசின் மிருகத்
தீனிதொடர் இரண்டாம் எழுத்து மாதத்தில் ஒன்றாம்
பொற்பார்திண் புயமுத்து சாமி மன்னா
புகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே"

என்பது அழகிய சொக்கநாதப் பிள்ளை என்பவ்ர் எழுதிய பாடல். இப்பாடலில் விடை கண்டறியும் வகையில் விடைகள் இலைமறைகாயாக அமைத்துப் பாடல் இயற்றப்பட்டுள்ளது. இப் பாடலின்

விடை: புதையல் என்பதையும் முடிவில் தெரிவித்துள்ளார்.

பொது அறிவு - வைரத்தில் எத்தனை மூலைகள் உள்ளன?

விடுகதைகள்

1. பாலில் உள்ளதை விட அதிக கல்சியம் உள்ள காய்கறி எது?

## அனுப்பவேண்டிய முகவரி


புதிர்ப்போட்டி இல: ------

373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2. கவிஞர் கண்ணதாசன் பாடல் எழுதிய படம் எது?
3. தமிழில் முதல் நாவல் எழுதியவர் யார்?
4. நமது இந்திய நேரம் எந்த இடத்தினை அடிப்படையாய் வைத்து கணிக்கப்படுகிறது?
5. அறிவியல் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
6. நாய்களே இல்லாத ஊர் எது?
7. மனிதர்களைக் கண்டு பயப்படும் வியாதிக்குப் பெயர் என்ன?
8. எந்தத் தட்பவெப்பத்திலும் உறையாத தனிமம் எது?
9. உலகிலேயே அதிக தித்திப்பான பொருள் எது?
10. மணம் இல்லாத மல்லிகை மாலையில் மலரும் அது என்ன?
11. அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன?
12. மண்ணுக்குள் இருக்கும், மங்கைக்கு அழகு தரும் அது என்ன?
13. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?
14. உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை அது என்ன?
15. ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடி வரும் பந்தும் அல்ல அது என்ன?
16. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன?
17. மழைகாலத்தில் பிடிப்பான் அவன் யாது?
18. எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன?
19. வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் . அவன் கூட்டாளி, அவர்கள் யார்?
20. காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காகம் இருக்கக் கொப்பில்லை.
21. கத்தி போல் இலை இருக்கும் கவரிமான் பூ பூக்கும் தின்ன பழம் கொடுக்கும் தின்னாத காய் கொடுக்கும் அது என்ன?
22. ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன?
23. கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர் அது என்ன?
24. அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்கவைப்பான் அவன் யார்?
25. ஓர் அரண்மனையில் முப்பத்திரண்டு காவலர்கள் அது என்ன?
26. விடுமுறை இல்லாத கடை எது?
27. சின்னப்பயல் உரசினால் சீறிப் பாய்வான் அது என்ன?
28. வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்?
29. யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?
30. வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார்?
31. அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வர வழைப்பாள் அவள் யார்?
32. வளைஞ்சு நெளிஞ்சு ஆடும் தண்ணீர் குடித்தால் சாகும் அது என்ன?

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

வினாக்குறியுள்ள விடங்களில் பொருத்தமான எண்களை இடுவதன் மூலம் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக




## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- சி.உதயன்
தரம் :- 10
பாடசாலை:-யா/சத்தியசாயி பாடசாலை

பெயர் :- பா.தேனுகா
தரம் :- 12
பாடசாலை:-யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்

பெயர் :- ம.சுரேன்
தரம் :- 11
பாடசாலை:-யா/மத்திய கல்லூரி

பெயர் :- க.தனுசா
தரம் :- 07
பாடசாலை:-யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லாரி

பெயர் :- சி.டிலக்ஷன்
தரம் :- 10
பாடசாலை:-யா/சத்தியசாயி பாடசாலை

பெயர் :- சி.சபிதா
தரம் :- 12
பாடசாலை:-யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------

பாடசாலை :- ------------------------

கல்வி கற்கும் தரம் :- ------------------------

வீட்டு முகவரி :- ------------------------

தொ.பேசி இலக்கம் :- ------------------------

# கல்லுண்டாய் வெளியில் கழிவுகள்; அப்பாவி மக்களின் ஆயுள் கேள்விக்குறி

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கல்லுண்டாய் வெளியில் கொட்டப்படும் முறையற்ற திண்மக் கழிவுகளால் மக்களுக்கு பாரிய சுகாதாரப் பிரச்சினை ஏற்படும்.

2014இல் நெருப்புக்காய்சலுக்கு 32 பேரும், வயிற்றுளைவு 142 ஆக 174பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜி.ரஜீவ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லுண்டாய் வெளியில் முறையற்ற திண்மக் கழிவுகளால் ஏற்படக் கூடிய சுகாதார பிரச்சினை தொடர்பாக 6 பிரதான தலைப்புக்களில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து விலாவாரியாக அவர் வெளிக்காட்டியுள்ளார்.

அதன் விபரம் வருமாறு:

கல்லுண்டாய் வெளியில் திண்மக் கழிவு மலக்கழிவு என்பன சரியான முறையில் அகற்றப்படாததால் வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக காய்ச்சல், வயிற்றுளைவு,போன்ற நோய்கள் விரைவாக பரவும் ஆபத்து உண்டு.

அத்துடன் கொட்டப்படும் திண்மக் கழிவு, மலக்கழிவுகள் எரிக்கப்படுவதனால் இப்புகையானது நவாலி, ஆனைக் கோட்டை பகுதிகளில் உள்ள மக்களுக்கு சுவாசம் சம்பந்தமான நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம உள்ளது. கல்லுண்டாய் கழிவுகளால் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அடைந்துள்ளதால் இப்பகுதியில் விலங்கு விசர் நோய் பெரும் ஆபத் தாக உள்ளது.

2014ஆம் ஆண்டு ஒரு மரணம் அப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது.

கல்லுண்டாய் கழிவுகள் வகைதொகையற்று கண்டபடி வீசப்படுகிறது. இதனால் பறவைகள், விலங்குகள், காற்று என்பவற்றினால் இப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள், கிணறுகள், குடியிருப்புக்கள் போன்றவற்றை சென்றடைந்து பெரும் சுகாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கும் வாய்ப்பும் உள்ளது.

மனித மலக்கழிவை முறையற்ற முறையில் அகற்றல்: கல்லுண்டாயில் தற்போது வெள்ளம் தேங்கியிருப்பதனால் இதனுள் மனித மலக்கழிவுகள் கொட்டுவதால் அனைத்து நீர் மூலங்களும் மாசடைந்து தொற்றுநோய் பரவும் அபாயம் காணப்படுகின்றது.

இப்பகுதியில் நுளம்பு இலையான் பெருமளவு பெருகுவதற்கு ஏற்றவாறு உள்ளதால் இவற்றின் மூலம் நோய்கள் பெருகும் அபாயம் காணப்படுவதாக சுகாதார வைத்திய அதிகாரி விரிவாக குறிப்பிட்டுள்ளார். (92)

## கருஜயசூரிய தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டம்

அரசாங்க நிர்வாக, மாகாண, சபைகள், உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சர் கருஜயசூரிய தலைமையின் கீழ் வடமாகாண சபைக்குரிய விசேட ஒருங்கிணைப்புக் கூட்டம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (92)

## ஆட்டோ சாரதி மீது யாழ். நகரில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில்வைத்து ஆட்டோ சாரதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். நகரப்பகுதியில் உள்ள வைரவர் ஆலயத்திற்கு அருகில் உள்ள ஆட்டோ தரிப்பிடத்திலேயே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வேலணை பகுதியைச் சேர்ந்த ஆட்டோ சாரதி தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் ஆட்டோ தரிப்பிட ஆட்டோ உரிமையாளர்கள் பலர் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (25)



**நாவற்குழி மன்னார் ஏ 32 வீதியில் கேரதீவு சங்குப்பிட்டி பாலத்திற்கு அப்பால் பரமனகிராய் வரையிலான வீதி அகலப்படுத்தி காப்பெற் இடும் பணிகள் மிக மும்முரமாக நடைபெறுவதனைக் காணலாம்.** (90)

## நெல்லுக்கு விலை நிர்ணயம் கைகளுக்கு எட்டாத நன்மை

அரசு அறிவித்த நெல்கொள்வனவு சம்பந்தமான அறிவித்தலால் விவசாயிகள் நன்மையடையவில்லை பதிலுக்கு பணமுதலாளிகளே நன்மைஅடைகின்றனர்.

அரசால் 50 ரூபா நெல்லின் கொள்வனவு விலையென அறிவித்தபோதும் கொள்வனவு செய்யும் தனிப்பட்ட முதலாளிகள் 30 ரூபாவிற்கே கொள் வனவு செய்கின்றனர்.


வேறுவழியின்றி விவசாயிகளும் குறைந்த விலைக்கே நெல்லினை விற்பனை செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசு நெல்லைசந்தைப்படுத்தும் சபை முலமோ விவசாயத்திணைக்களம் மூலமோ நேரடியாக விவசாயிகளிடம் நெல்லைக் கொள்வனவு செய்து விவசாயிகளது கடன்சுமையைக் குறைக்க வேண்டும்.

அத்துடன் ஊடகங்கள்முலம் இக் கொள்வனவு பற்றி அறிவிக்கவேண்டும் என்ற தீர்மானம் தென்மராட்சி மீசாலை சுயாதீன கமக்காரர் காங்கிரஸ் அமைப்பினால் அமைச்சர் ரவிகருணநாயக்க பிரதியமைச்சர் விஜயகலா.மகேஸ்வரன் மற்றும்சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பி.வி.ராஜறட்ணம் தெரிவித்தார். (11)




## உருண்டுபோன நினைவுகளை உரசிப்பார்ப்பது தற்போது தேவை தானா?.....


சிங்கள வாக்குகளுக்காக பேச்சு மாறுகின்றது அரசு
மாமன் சொன்னதை மருமகன் செய்தார்
மாகாண சபையில் முதலமைச்சர் சீற்றம்
தமிழ் மக்களுக்கு நல்லை அதனாலேயே பங்கேற்பு
சம்பந்தன் தெரிவிப்பு

பயங்கரவாத ஒழிப்பு என்கின்ற பெயரில் அப்பாவிப் பொது மக்களைக் கொன்று குவித்த நிகழ்வுகள் எளிதில் மறந்து விடக்கூடியவையல்ல. மனித உரிமைகளிற்கப்பால் நிகழ்ந்த படுகொலைகள்தான் அவை. இதை யாரும் மறுப்பதற்கும் இடமில்லை, மறப்பதற்கும் இடமில்லை.

ஆனால் அது ஒரு கை மாத்திரம் தட்டியெழுந்த சத்தமல்ல.. நாம் இஷ்டமில்லா யுத்தத்தால் நஷ்டப்பட்ட ஒரு வரலாற்றுப் பின்னணியும் அதில் உள்ளது. இதை எமது அர்த்தமற்ற தேசிய உணர்வு ஏற்க மறுத்தாலும் விளங்கிக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அன்று தொட்டு இன்று வரை மனக் குமுறல்களை மார்பு தட்டி வெளிப்படுத்தியமையால் நாமடைந்த நன்மைகளை விட பின்னடைவுகளே அதிகம். அந்த வகையில் தற்கால அரசியல் சூழலில் 'சிறிலங்கா செய்தது இனப்படுகொலையே!..' எனுமொரு பிரேரணை வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட வேண்டுமா?...

அதில் பேசிய முதலமைச்சர் 'தற்போதைய அரசு பேச்சு மாறுகின்றது, மாமன் சொன்னதை மருமகன் செய்கின்றார்' என்றெல்லாம் கூறியது பொருத்தமானதா?.....

இவை மீண்டும் சிங்கள இனவாத சக்திகளைத் தூண்டிவிடும் செயலாக மாறாதா?.... வீட்டில் இருந்து அரசியலை விமர்சிப்பது போல் செங்கோலின் முன்னின்று ஒரு முதலமைச்சர் பேச முடியாதல்லவா?....

என்கின்ற விமர்சனங்களெல்லாம் யதார்த்த பார்வை கொண்ட பொது மக்கள் மத்தியில் பலமாக எழுந்துள்ளது.

இரு துருவங்களிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சாதுரியமாகக் காய் நகர்த்துகின்றது. அரச எதிர்ப்பொன்றே தமது எதிர்கால அரசியல் பலம் என்பதை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் கூட்டமைப்பு, வந்த இணக்கத்தையும் மக்கள் வருத்தப்படும் வண்ணம் திசைமாற்றும் திரிதூண்டிகளாக தற்போது தொழிற்படுகின்றனர்.

இலங்கை வாழ் தமிழ்மக்களை இந்திய தமிழ் மக்களைப் போன்று இலகுவில் ஏமாற்றிவிட முடியாது. என்பதை அண்மைக்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றாகப் புரிந்துவிட்டது.

எதிர்ப்பு அரசியலை மாத்திரம் முன்னிறுத்தி எதிலும் குழப்பத்தை உண்டுபண்ணி எக்காளமிடும் கட்சியாக மாத்திரம் மக்கள் தங்கள் கட்சியைப் பார்க்க எத்தனித்துவிட்டார்கள் என்பதை உணர்ந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கூட்டணி சார்பாக ஒரு வேடமும் மாகாண சபை மூலம் வேறொரு வேடமும் போட்டு எல்லாவகையான மக்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவுசெய்ய திட்டமிட்டுள்ளனர் – தமிழ் மக்களிற்கான நிரந்தர தீர்வினை முறியடிப்பதை மாத்திரம் இலக்கு வைத்து.

'இணக்கப்பாட்டு சமிக்ஞைகள் எதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதுவரை சிங்கள அரசுக்குக் காட்டியது.' என்கின்ற மக்களின் எதிரொலிக்கு அதிர்வினை உண்டுபண்ண சுதந்திர தின நிகழ்வில் 'அதன் தலைமை கலந்து கொண்டுவிட்டு தற்போது மாகாணசபை மூலம் அந்த இணக்கப்பாட்டைக் குலைக்க எத்தனிக்கின்றது கூட்டமைப்பு.

இலங்கையின் புதிய அரசுடன் இணைந்து செயற்பட்டு விசாரணைக்கு அப்பால் இலங்கையில் நிரந்தர தீர்வினைத் தேட முற்பட்டால் தமிழ்மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுவிடும். இனவாதக் கருத்துக்களிற்கு இடமற்றுவிடும்.

அந்தக்கட்டத்தில் தங்களின் கட்சிசார் தேவை மக்களிற்கு இருக்காது. அவ்வாறான நிலையில் தமது அரசியல் அந்தஸ்துக்கள் தூக்கி எறியப்பட்டுவிடும். ஆகவே மீண்டும் அரச எதிர்ப்பை அரசியல் பலமாக்க வேண்டும்.

அப்படியானால் எதை உயர்த்தி உரசுவது?... உணர்வு பூர்வமாக உசுப்பேத்தும் இன அழிப்புத்தான் இதற்குப் பொருத்தமான படலம். ஏனெனில் தமிழ்மக்களின் பலவீனமும் நன்றாகத் தெரிந்தவர்களல்லவா இவர்கள்.

அன்று சிவாஜிலிங்கத்தின் அலட்டல் பிரேரணை இன்று அதிமதுரமாச்சு. தமிழ் மக்களின் தெரிவுகளும் இவர்கள்தானே....!

**இட்டமுடன் எம் தலையில் இன்னபடியென்றெழுதி விட்ட சிவனும் செத்துவிட்டான்..**

**- வெண்கட்டியன்.**

# சந்தேகநபர்கள் தடுத்துவைப்பு சட்டத்தை நீடிக்க அரசு முயற்சி

(கொழும்பு)

பிடிவிறாந்து உத்தரவின்றி சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்களுக்கு தடுத்து வைக்கும் சட்டத்தை மேலும் நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இரண்டு ஆண்டு காலத்திற்கு இந்த சட்டத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் ஆயத்தமாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசாங்கம் இந்த சட்டத்தை நீடித்தால், அது நாட்டின் மனித உரிமை நிலைமைகளை மிக மோசமாக பாதிக்கும் என மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் டொக்டர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் சந்தேக நபர்கள் பிடிவிறாந்து உத்தரவின்றி 48 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சட்டத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்



பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சட்டம் இரண்டு ஆண்டு காலத்திற்கு மட்டும் அமுல்படுத்தப்படக் கூடிய வகையில் கடந்த 2013 ஆம் ஆண்டு நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது என மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய, சந்தேக நபர் கைது செய்யப்பட்ட உடன் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட வேண்டுமெனவும், இவ்வாறு 48 மணித்தியாலங்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யாது தடுத்து வைப்பது பரிந்துரைகளுக்கு புறம்பானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சர்ச்சைக்குரிய சட்டம் இந்தவாரத்தில் காலாவதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசாங்கம் சட்டத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க முயற்சிப்பதாகவும், அது நாட்டின் மனித உரிமை நிலைமைகளை மிகவும் மோசமாகப் பாதிக்கும் எனவும் மஹானமஹேவா தெரிவித்துள்ளார்.

# ஊழல் மோசடி வழக்குகளை ஆமைவேகத்தில் நகர்த்தும் அரசு

## ஜே.வி.பி.செயலர் விசனம்

(கொழும்பு)

ஊழல் மோசடிகளுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக தண்டனை வழங்குவதில் காணப்படும் அசமந்தப் போக்கு அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடையக் காரணமாக அமையலாம் என மக்கள் விடுதலை முன்னணி எச்சரித்துள்ளது.

'அதிகார மாற்றம் மற்றும் மக்கள் சவால்' என்ற தொனிப் பொருளில் மாத்தளையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார்.

ஊழல் மோசடிகள் தொடர்பான வழக்குகளை அரசாங்கம் ஆமை வேகத்தில் முன்னெடுப்பதாக சுட்டிக்காட்டிய ரில்வின் சில்வா, அரசாங்கத்தின் இந்தக் கொள்கை தவறான ஒன்றாகும் எனவும் குறிப்பிட்டார்.

# கடத்தமுயன்ற வெளிநாட்டுப் பணத்தை அரசுடமையாக்குமாறு உத்தரவு

## கடத்தியவருக்கு 20 இலட்சம் தண்டம்



(கொழும்பு)

வெளிநாட்டுக்கு கடத்த முயன்றபோது கைப்பற்றப்பட்ட 5 கோடி ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு பணத்தாள்களை அரசுடமையாக்குமாறு பணித்துள்ள இலங்கை சுங்கம், சந்தேக நபருக்கு 20 இலட்சம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

இலங்கை ரூபாவின் மதிப்பில் ரூபா 5 கோடி பெறுமதியான பல்வேறு நாடுகளின் பணத்தாள்களை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை கைப்பற்றினர்.

இந்த பணத்தாள்களை பயணியொருவர் தன்னுடைய பயணப் பையில் மறைத்துவைத்து டுபாய் ஊடாக கட்டாருக்கு செல்வதற்கு முயன்ற போதே அவருடைய பயணப் பையிலிருந்து இந்தப் பணம் மீட்கப்பட்டதாகவும் அப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

சந்தேகநபர், கொழும்பு-15 மட்டக்குளிய பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான நபர் என்றும் அவரையும் கைது செய்துள்ளதாகவும் அப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அவருடைய பயணப்பையிலிருந்து குவைட் டிராம் 950, ஜப்பான் யென் 110,000, கட்டார் ரியால் 48,500, சவுதி ரியால் 802,000, அமெரிக்க டொலர் 72,000, யூரோ 450, பிரித்தானிய பவுன் 30,000, ஐக்கிய அரபு இராச்சியத்தின் டிராம் 33,500 பெறுமதியான பணத்தாள்களே மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான கிவ். ஆர் 663 விமானத்தில் டுபாய் ஊடாக கட்டார் இராச்சியத்துக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு வந்திருந்த போதே, நேற்றுமுன்தினம் அதிகாலை 3.55 இற்கு கைது செய்துள்ளதாக சுங்கப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

# மின்சாரசபை ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோத சம்பள சுற்றறிக்கையை நீக்குதல் மற்றும் நிதி மோசடியுடன் தொடர்புபட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்குதல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை மின்சார சேவையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 18 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் இலங்கை மின்சார சபையின் பிரதான அலுவலகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக, அந்த சங்கத்தின் பிரதம செயலாளர் ரஞ்சன் ஜெயலால் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமது சங்கம் உள்ளிட்ட 26 மின்சார சபை தொழிற் சங்கங்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளதாக கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

## ஜனாதிபதி உறுதியளிப்பு

நாட்டுக்குள் போதைப் பொருள் கடத்தப்படுவதனை தடுக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதனை தடுக்க விமான நிலையம் மற்றும் துறைமுகத்தை மையப்படுத்தி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

நீண்ட காலமாக மக்களையும் நாட்டையும் பிரச்சினையில் ஆழ்த்தி வரும் போதைப் பொருள் கடத்தல் பிரச்சினைகளுக்கு புதிய அரசாங்கம் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கும்.

போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளை தடுக்க கடந்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதிலும் சில காரணங்களினால் போதைப பொருள் கடத்தல்களைத் தடுக்க முடியவில்லை.

எனினும் புதிய அரசாங்கம் கடுமையான அர்ப்பணிப்புடன்



போதைப் பொருள் கடத்தல்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது.

போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுக்கும் சட்டங்களை கடுமையாக்குவதுடன் கடத்தல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். விமான நிலையம் மற்றும் துறைமுகத்தை மையப்படுத்தி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதைப் பொருள் ஒழிப்பு குறித்த சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை காப்புறுதிசபையில் மீளவும் இன்ரானி சுகததாஸ



முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் மனைவியான, இன்ரானி சுகததாஸ மீண்டும் காப்புறுதி சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் காப்புறுதி சபையில் கடமையாற்றிய இவர், பின் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக கடமைபுரிந்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தில், அரசாங்க நிறுவனங்களில் உயர் அதிகாரிகளாக பணியாற்றிய சிலர் இராஜினாமா செய்ததோடு, சிலர் வேறு பணிகளுக்கு மாற்றப்பட்டனர். எனினும் இன்ரானி சுகததாஸவை முன்னர் கடமையாற்றிய இலங்கை காப்புறுதி சபைக்கே மீண்டும் பணிக்கமர்த்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராஜிதவிற்கு தேசிய பட்டியல் மகன் கொழும்பில் போட்டி





சுகாதார அமைச்சரும், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட மாட்டாரென்றும், அவரது புதல்வர் சதுர சேனாரத்ன கொழும்பில் போட்டியிடுவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.க.தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, ராஜிதவின் புதல்வரை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடக் கோரியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரதிநிதித்துவப்படுத்தி, ராஜித சேனாரத்ன நாடு பூராவும் பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சதுர சேனாரத்ன, ரத்ன ஹிமியின் 'தூய்மையான நாளை' அமைப்பிலும் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

(i) தரம் 2 மாணவர்களின் எண்ணிக்கைக்கும் தரம் 4 மாணவர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?


(ii) சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் ஐந்திற்கு உட்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 185 ஆகும். எனின், தரம் 5 மாணவர்களின் எண்ணிக்கையைக் கண்டு உரிய நிரலில் குறிக்குக நிரலை நிழற்றுக.

34. 
கேத்திரகணிதப் பலகை ஒன்றில் அறையப்பட்டுள்ள ஆணிகளை சுற்றி இறப்பர்பட்டி ஒன்றினால் சுற்றப்பட்டுள்ள வடிவத்தை உருகாட்டுகின்றது. ஆணிகளுக்கு இடையே உள்ள தூரம் 1km எனின் இவ்வடிவத்தின் பரப்பளவு யாது? ..............................

35. கனவுருவ வடிவமுள்ள ஏழு ஒத்த மரக்குற்றிகளை ஒன்றின் மீது ஒன்று வைத்து அமைத்த வடிவம் உருவில் காணப்படுகிறது. இவ் உருவின் அடியின் நீளம் 4km ஆகும். இதன் சுற்றளவு யாது?




..............................

36. 
அருகே உள்ள சதுரக்கோட்டுப்படம் சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 0.1 பகுதியை நிழற்றுக


37. ஒரு காய் கறித்தோட்டத்தில் கத்தரிக்காய்களைப் போன்று இரண்டு மடங்கு பாகற்காய்களும், கத்தரிக் காய்களைப் போன்று ஆறு மடங்கு தக்காளிக்காய்களும் ஒவ்வொரு நாளும் பறிக்கப்படும். ஒருநாள் 150 பாகற்காய்கள் பறிக்கப்பட்டன. அன்று பறிக்கப்பட்ட மொத்தக்காய்கள் எத்தனை?

..............................

38. மாலதியிடம் உள்ள பணத்தின் அரைப்பங்காகிய 450ரூபாவை விமலாவிற்கு கொடுத்த போது, அது அனுலாவிடம் உள்ள பணத்தை விட 75ரூபா கூடியதாகும். எனவே மூவரிடமும் உள்ள மொத்தப்பணம் எவ்வளவு?

..............................

39. செவ்வகவடிவமான புற்றரை ஒன்றின் நீளம், அதன் அகலத்தை விட 37m கூடியது. அத்தரையின் சுற்றளவு 326m எனின் அதன் நீளம் யாது? ..............................

40. 


இவ்வுருவின் சுற்றளவைத் தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கு ஏற்ப காண்க

..............................

41. ரூபா 172 பெறுமதியுள்ள பொருட்களை வாங்கிய கமலா 200 ரூபா தாள் ஒன்றை கொடுத்தாள். வியாபாரி கமலாவிடமிருந்து இன்னும் 22ரூபாவை வாங்கிக்கொண்டு மிகுதிப்பணத்தைக் கொடுத்தார். அவர் கொடுத்த மிகுதிப்பணம் எத்தனை ரூபாய்?

..............................

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01). 2  (02). 3  (03). 2  (04). 2  (05). 3  (06). 1  (07). 3  (08). 3  (09). 3  (10).3
(11). 3  (12). 3  (13). 2  (14). 3  (15). 3  (16). 60  (17). 2மடங்கு  (18).80  (19). 3
(20).1  (21). 2  (22). 2  (23). 1  (24). 1  (25). 3  (26). 1  (27). 2  (28). 3  (29). 1
(30).2  (31). 1  (32). 3  (33). 2  (34). 1  (35). 2  (36). 3  (37). 3  (38). பசு
(39). தொலைக்காட்சிப்பெட்டி  (40).அண்ணி  (42).1  (43).1  (44).3  (45).2  (46).2

இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

1 தொடக்கம் 41 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையை எழுதுக

01. 
(i) இத்திண்மத்தின் பெயர் யாது? ..............................
(ii) இதன் விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................

02. 90099 என்பதை எழுத்தில் எழுதுக. ..............................

03. 


| | |
|---|---|
| 102 | 409 |
| 106 | 535 |

காட்டப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி கூட்டுத்தொகை 515ஐத் தரும் இரண்டு எண்களையும் எழுதுக..............................


04. ஒரு பூரணமற்ற விலைச்சீட்டை கீழே காணப்படுகின்றது. இதில் உள்ள நான்கு வெற்றிடங்களையும் நிரப்புக

| பண்டம் | அளவு (kg) | 1kg இன் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| i சீனி | $2\frac{1}{2}$ kg | 90 | 00 | 225 | 00 |
| ii தேயிலை | 750g | ..... | ..... | 225 | 00 |
| iii பருப்பு | ..... | 72 | 00 | 72 | 00 |
| iv கடலை | 100g | ..... | ..... | 16 | 00 |
| | iv மொத்தம் | | | ..... | ..... |


05. அருகில் உள்ள முப்பரிமான உருவின் பெயர் யாது? ..............................
i. அதன் விளிம்புகள் எத்தனை? ..............................
ii. அதன் உச்சிகள் எத்தனை? ..............................
iii. அதன் முகங்கள் எத்தனை? ..............................



06. அருகில் உள்ள சாதாரண A கடிகாரமானது 1.15 நிமிடங்கள் குறைவாகச் செல்கின்றது. எனின், தற்போதைய உண்மை நேரம் யாது என B என்ற கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக





07. அருகில் உள்ள உருவின் சுற்றளவைக் காண்க
..............................cm




08 நிறுவனம் ஒன்றிற்கு மசகு எண்ணெய் விநியோகம் மு.ப.11.45 இற்கு ஆரம்பமானது. சுமார் 35 நிமிடங்கள் அவ்விநியோகத்திற்கு செலவிடப்பட்டதெனின், மசகு எண்ணெய் விநியோகம் முடிவடைந்த நேரத்தைக் காண்க ..............................

09. ஒவ்வொன்றும் 850ml கொள்ளளவுள்ள 10 போத்தல்களில் உள்ள பானம் வேறொரு பாத்திரத்தில் இடப்பட்டது. பாத்திரத்தில் உள்ள பானத்தின் மொத்த கனவளவை லீற்றரிலும் மில்லிலீற்றரிலும் காண்க?

10.  உருவின் நிறந்திட்டப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக ..............................................

11. பயணத்தை ஆரம்பித்த போது பேருந்து ஒன்றின் மானியில் பின்வருமாறு பதியப்பட்டு இருந்தது.

| 0 | 3 | 3 | 9 | 9 | 0 | km |
|---|---|---|---|---|---|---|

வாகனம் மேலும் 11km சென்ற பின்னர் மானியில் பதிவாகின. இலக்கங்களை வெற்றுக் கூடுகளினுள்ளே எழுதுக.

| | | | | | | km |
|---|---|---|---|---|---|---|

12. கொழும்பிலிருந்து கண்டிக்கான தூரம் 110 கிலோமீற்றர் ஆகும். பேருந்தொன்று 10 கிலோமீற்றர் செல்வதற்கு 3லீற்றர் டீசல் தேவைப்படுகிறது. அப்படியாயின் பேருந்து கொழும்பிலிருந்து கண்டிக்குச் சென்று மீண்டும் கொழும்புக்குத் திரும்புவதற்கு எத்தனை லீற்றர் டீசல் தேவைப்படும்? ..............................................

13. 15 ரூபாவுக்கு 6 நம்புட்டான்கள் வாங்க முடியும். 15 நம்புட்டான்களை வாங்க எவ்வளவு பணம் தேவை? ..............................................

14. ஐம்பத்தொன்பது என்பதை உரோம இலக்கத்தில் எழுதுக? ..............................................

15. அண்ணனின் தற்போதைய வயது அவனது தம்பியின் தற்போதைய வயதின் 3 மடங்காகும். 6 வருடங்களுக்கு முன் அண்ணனின் வயது 18ஆயின் தம்பியின் தற்போதைய வயது என்ன? ..............................................

16. செவ்வகம் ஒன்றின் நீளம், அகலத்தில் மூன்று மடங்காகும். அதன் நீளம் 18cm ஆகும். அதன் சுற்றளவு யாது? ..............................................

17. 27 + 3 x 3 x 2 x 0 = ..............................................

18. வகுப்பறை ஒன்றிலுள்ள கதிரைகளின் எண்ணிக்கை 45 ஆகும். அங்குள்ள மேசைகளின் எண்ணிக்கையானது அங்குள்ள கதிரைகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 5 குறைவாகும். இவ்வாறு மூன்று வகுப்பறைகளில் காணப்பட்டன. எனின், அம்மூன்று வகுப்பறைகளிலும் உள்ள கதிரைகளினதும், மேசைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது? ..............................................

19. பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தில் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை கல்விகற்கும் ஆண் பெண் மாணவர்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றது

| தரம் | மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| 2 | 45 | 42 |
| 3 | 50 | 48 |
| 4 | 75 | 65 |
| 5 | 65 | 66 |


(i) தரம் 5இல் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..............................................

(ii) அட்டவணையில் உள்ள பெண் மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..............................................

(iii) ஆண் மாணவர்களுக்கும் பெண் மாணவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ..............................................

(iv) தரம் 2 தொடக்கம் 5 வரையான மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................................

(v) ஆண் மாணவர்களின் எண்ணிக்கையைக்காட்டும் நிரல்வரைபை வரைக (நிரல்களைநிழற்றுக)





20. இன்னும் மூன்று வருடங்களில் புனிதாவின் வயது வனிதாவின் வயதின் 3 மடங்காகும். இப்பொழுது புனிதாவின் வயது 15 எனின் வனிதாவின் வயது யாது? ..............................................

21. ரூபா 30இற்கு 15 கொய்யாப்பழங்கள் வாங்கலாம். 35 கொய்யாப்பழங்கள் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டும்? ..............................................

22. செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தைப் போன்று 3 மடங்காகும். செவ்வகத்தின் சுற்றளவுக்கு சமமான சதுரம் ஒன்று உள்ளது. செவ்வகத்தின் நீளம் 12cm எனின், சதுரத்தின் ஒரு பக்க அளவு யாது? ..............................................

23. 250 கிராம் எள்ளிலிருந்து ஒரே அளவான 25 எள்ளுருண்டைகள் செய்யலாம் 1.5kg எள்ளிலிருந்து எத்தனை எள்ளுருண்டைகள் செய்யலாம் ..............................................


24. 1லீற்றர் பெற்றோலில் 28 கிலோ மீற்றர் பிரயாணம் செய்யலாம். 196 கிலோமீற்றர் பிரயாணம் செய்யத் தேவையான பெற்றோலின் அளவு யாது? ..............................................

25. ஒரு பூரணமற்ற சிட்டை கீழே காணப்படுகின்றது. அதில் உள்ள நான்கு வெற்றிடங்களையும் நிரப்புக

| பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பயிற்சிப் புத்தகங்கள் | 6 | 20 | 00 | 120 | 00 |
| பென்சில் | 2 | -------- | -------- | 16 | 50 |
| பேனை | --------- | 9 | 00 | 27 | 00 |
| கடித உறை | 3 | -------- | -------- | 4 | 50 |
| மொத்தம் | | | | -------- | -------- |

26. ஒரு கிலோகிராம் அரிசியின் விலை ரூ.48 ஆகும். 2kg 500g அரிசியின் விலை எவ்வளவு? ரூ ..............................................

27. ஒரு தோட்டத்திற்கு வரும் நான்கு வகைப்பறவைகளைக் குறிப்பிடும் பூரணமற்ற வரைபு காணப்படுகின்றது. அங்கு வரும் கிளிகளின் எண்ணிக்கை அங்கு வரும் மைனாக்களின் எண்ணிக்கையினதும், புறாக்களின் எண்ணிக்கையினதும் கூட்டுத்தொகைக்குச் சமம். வரைபில் உரிய நிரலில் கிளிகளின் எண்ணிக்கையைக் குறித்து அந்நிரலை நிழற்றுக



28. ஒரு தொட்டியில் நிரப்பத்தக்க நீரின் கனவளவு 8750 லீற்றர் ஆகும். அத்தொட்டியில் தற்போது 3695 லீற்றர் நீர் உள்ளது. எஞ்சியுள்ள பகுதியை நிரப்பத் தேவைப்படும் நீரின் கனவளவு யாது? ..............................................


29. ஒரு தேக்கரண்டி கொள்ளத்தக்க திரவத்தின் கனவளவு 5ml ஆகும். ஒரு நோயாளிக்கு ஒரு தடவைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு நாளுக்கு மூன்று தடவை மருந்து கொடுக்கப்பட்டது. அவருக்கு ஒரு நாளுக்கு கொடுக்கப்பட்ட மருந்தின் கனவளவு யாது? ..............................................


30. 5m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 20cm நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது? ..............................................

31. முற்பகல் 10.00 இற்குப் புறப்படக் குறிக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று 20 நிமிடங்கள் தாமதித்து பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 4 மணித்தியாலயம் 45 நிமிடம் எடுத்தது. பேருந்து பயணத்தைப் பூர்த்தி செய்த நேரம் யாது? ..............................................

32. கூட்டுக - $\frac{1}{6} + \frac{2}{3}$ = ..............................................

33. பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தின் தரம் ஐந்திற்கு உட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழே வரைபில் காணப்படுகின்றது







நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய கால்கோள் விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் பா.பிரதீபன் மாணவன் ஒருவருக்கு காலணிகள் வழங்குவதையும் அதிபர் கே.புஷ்பராஜா உரையாற்றுவதையும் கௌரவிக்கப்பட்ட தரம் 1 மாணவர்களையும் காணலாம்

# வடமாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடம் நிரப்புவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பலமுறை சுட்டிக்காட்டியதன் விளைவாக ஆசிரிய வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தை வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கோரியுள்ளது.**

கடந்த காலங்களில் தேவைக்கு அதிகமாக பொருத்தமில்லாத பாடத்துறைசார் ஆசிரியர்களை மேலதிகமாக நியமனம் செய்து தேவையான பாடத்துறைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளிலும், குடாநாட்டில் உள்ள சில பாடசாலைகளிலும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம், தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரிய பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது.

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றுவதற்காக முன்னைய ஆளுநரின் கட்டளைக்கு அமைய குடாநாட்டுப் பாடசாலைகளில் இருந்து பொருத்தமில்லாத பாடத்துறை ஆசிரியர்கள் கட்டாயமாக இடமாற்றம் செய்யப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாகவும் பல்வேறு துயரங்களை உடையவர்களாகவும் இனங்காணப்பட்டனர்.

அத்தகைய நிலை 2015ஆம் ஆண்டிலும் தொடருகின்றது. இம்முறையும் பெரும்பாலான பெண் ஆசிரியர்களும் பொருத்தமில்லாத பாடத்துறை ஆசிரியர்களும் துணுக்காய், முல்லைத்தீவு, மடு, வவுனியா வடக்கு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதனை வன்மையாக கண்டித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பொருத்தமில்லாத ஆசிரியர்களை வைத்து ஆசிரியப் பரம்பலைச் சீர் செய்வதை விடுத்து பொருத்தமான பாடத்துறைகளுக்கு பொருத்தமான இடங்களுக்கு புதிய நியமனங்களை வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தது.

அதன் அடிப்படையில் புதிய பட்டதாரி ஆசிரியர்களின் நியமனத்துக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இது தவிர கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழிநுட்பம், விவசாயம் போன்ற பாடங்களுக்கு பட்டதாரிகள் அல்லாத பொருத்தமானவர்களிடமிருந்தும் விண்ணப்பங்களைக் கோரி புதிய ஆசிரியர்களை நியமனம் செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்குறித்த பாடத்துறைசார் பட்டதாரிகள் வடமாகாணத்தில் போதிய அளவில் இல்லை என்பதனையும், அவர்கள் வேறு திணைக்களங்களில் நியமனம் பெறுவதனையும் கருத்தில் கொண்டு பட்டதாரிகள் அல்லாதவர்களிடமிருந்தும் விண்ணப்பங்களைக் கோர முடியும் எனவும் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன்,

வடமாகாணப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் கணிதத்துறையிலும், விஞ்ஞானத்துறையிலும், விவசாயத் துறையிலும் கற்று ஆங்கில அறிவுடன் பல்கலைக் கழகத்தை. ஓரிரு புள்ளிகளால் தவறவிட்ட பலர் உள்ளனர்.

அவர்களுக்கான போட்டிப் பரீட்சை ஒன்றினை நடாத்தி ஆசிரியர்களாக நியமனம் செய்யும் போது இடைநிலை வகுப்புகளில் எற்பட்டுள்ள பாடத்துறைப் பற்றாக்குறை பெருமளவில் நீக்கப்படும் என்றார்.

இந்த முன்மொழிவை கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிடமும் முன்வைத்துள்ளதோடு, அழகியல் பட்டதாரிகளாக மேலதிகமாக உள்ள ஆசிரியர்களில் விருப்பமானவர்களுக்கு ஆரம்பக்கல்வித்துறைசார் குறுகிய காலப் பயிற்சி ஒன்றினை வழங்கி ஆரம்பக் கல்விப் பிரிவில் ஏற்பட்டுள்ள ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## தூயகார்மேல் அன்னையின் புனரமைக்கப்பட்ட ஆலயத் திறப்புவிழா



குருநகர் தூயகார் மேல் அன்னையின் புனரமைக்கப்பட்டுள்ள ஆலயம் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் ஆசிர்வதித்து இன்று மாலை 5 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த கார்மேல் அன்னை ஆலயம் கடந்த 2013 ஆம் ஆண்டு இடிமின்னல் தாக்கத்துக்கு உள்ளாகிப் பலத்த சேதமடைந்தது.

கோவிலைச் சேர்ந்த புலம் பெயர் உறவுகளும் பங்கு மக்களும் 2 கோடி ரூபாவுக்கும் மேல் செலவு செய்து கடந்த ஒரு வருடகாலமாக புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று வந்தன.

இக்காலங்களில் ஆலயத்துக்கு அருகே அமைந்துள்ள கார்மேல் மண்டபத்தில் அன்னையின் சொரூபம் வைக்கப்பட்டு வழமையாக இடம்பெறும் வழிபாடுகளும் திருப்பலிகளும் நடைபெற்று வந்தன.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆலயம் மிகவும் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை 5 மணிக்கு ஆலயம் திறந்து வைக்கப்படுவதுடன் ஆயர். மற்றும் பங்குத் தந்தை உதவிப் பங்குத்தந்தைகள் சேர்ந்து ஒப்புக்கொடுக்கப்படும் கூட்டுத் திருப்பலி இடம் பெறும்.

இந்நிகழ்வில் அனைவரும் ஆசாரமாகக் கலந்து அன்னையின் அருளையும் ஆசியையும் பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் யாழ்.மறை மாவட்ட ஆயர் மற்றும் பங்குத் தந்தையர்கள் ஆலயமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள். (68)

## அபிவிருத்தித் திட்டங்கள் அதிகாரிகளுடன் ஆராய்வு



(மன்னார்)

கைத்தொழில்.வணிகத் துறை அமைச்சின் கீழ் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராயும் கூட்டமொன்று மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது .

அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் தேசப் பிரிய உள்ளிட்ட அதிகாரிகள்.மற்றும் பிரதேச செயலாளர்கள் இதன் போது சமூகமளித்திருந்தனர்.

இதன் போது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்த அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்திகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

கடந்த சில மாதங்களாக தையல் பயிற்சிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அதனைமள ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உடன் ஆரம்பிக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

## பொலிஸாருக்கு எதிரான போராட்டம் கைவிடப்பட்டது



வவுனியா நகரசபையினரால் பொலிஸாருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையாக, சந்தைப் பகுதியில் தெருவோர வியாபாரத்தில் ஈடுபட்டவர்களை அகற்றியபோது, தமது செயற்பாடுகளை இளைஞர் ஒருவர் தனது கையடக்க தொலைபேசியில் புகைப்படம் எடுத்தார் என்று நக்ரசபையைச் சேர்ந்தவர்கள் அந்த இளைஞரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இளைஞன், நகரசபையினர் தன்னைத் தாக்கினர் என்று பொலிஸாரிடம் தெரிவித்ததால், நகரசபை உத்தியோகத்தர்களை பொலிஸார் கைது செய்தனர் இந்தநிலையில், தம்மை பொலிஸார் அவமதித்தனர் என்று கூறி நகரசபை பணியாளர்கள் கடந்த புதன்கிழமை முதல் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் நகரசபைக்குச் சென்ற வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் லசந்த விக்கிரமசிங்க, தலைமையிலான குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் பக்கச் சார்பின்றி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும், நகரசபையின் செயற்பாடுகளுக்கு கடந்த காலங்களில் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கியது போன்று இனிவரும் காலங்களிலும் வழங்குவர் என்றும் தெரிவித்தார். இதனையடுத்து குறித்த போராட்டம் கைவிடப்பட்டது.

# கர்நாடகா ஆனைக்கல் அருகே தடம்புரண்டது இன்டர்சிட்டி ரயில்

## 12 பேர் பலி; 60 பேர் காயம்



இந்தியாவின் கர்நாடக மாநிலம் ஆனைக்கல் அருகே பெங்களூர்- எர்ணாகுளம் செல்லும் இன்டர்சிட்டி பயணிகள் ரயில் நேற்றுக்காலை 7.40 மணியளவில் தடம் புரண்டதில் 12 பேர் பலியாகினர்.

மேலும், 60 பேர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சம்பவ இடத்தில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெங்களூரில் இருந்து கோயம்புத்தூர் வழியாக எர்ணாகுளம் செல்கின்ற இன்டர்சிட்டி விரைவு ரயில் ஓசூரில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆனைக்கல் என்ற இடத்தில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

பெங்களூரிலிருந்து வந்து கொண்டிருந்த அந்த ரயில் ஆனைக்கல் பகுதியினைக் கடக்கும் போது திடீரென்று டி-8, டி-9 மற்றும் எஞ்சின் உட்பட நான்கு பெட்டிகள் தடம் புரண்டன. இதில் இரண்டு பொதுப் பெட்டிகளும், 2 ஏசி பெட்டிகளும் அடக்கம்,

சம்பவ இடத்துக்கு தமிழகம் மற்றும் கர்நாடகா ரயில்வே அதிகாரிகள் விரைந்துள்ளனர். மேலும் இரு மாநிலங்களில் இருந்தும் 10 அம்புலன்ஸ் வாகனங்களும் மீட்புப் பணிக்கு விரைந்துள்ளன.

பெங்களூர் ரயில் விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தனது ட்விட்டரில், பெங்களூர்-எர்ணாகுளம் எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என விரும்புகிறேன். ரயில்வே அமைச்சரும், அதிகாரிகளும் விபத்துக் குறித்து கூர்ந்து கவனித்து வருகின்றனர். மீட்புப் பணிகள் சரியான முறையில் நடைபெறுவதை அவர்கள் உறுதி செய்வார்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு மத்திய ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு விரைந்துள்ளார். அவருடன் ரயில்வே வாரியத் தலைவரும் சென்றுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் இழப்பீடு வழங்கபபடும். விபத்தில் படுகாயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000-மும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.20,000 உதவித் தொகையும் வழங்கப்படும்" எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவில் வரி ஏய்ப்புக்கு 7ஆண்டுகள் சிறைத்தண்டனை

வருமான வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்று இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,


வருமான வரிஏய்ப்பு தொடர்பாக நடப்பு நிதி ஆண்டில் டிசம்பர் மாதம் வரை 628 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில 56 வழக்குகள் வெளிநாட்டு வருவாய் தொடர்பானவை.

மேலும் இந்த நிதியாண்டில் டிசம்பர் மாதம் வரை ரூ.582 கோடி மதிப்பிலான சொத்துகளை வருமான வரித் துறை பறிமுதல் செய்துள்ளது. இதுவரை 414 நிறுவனங்களில் சோதனைகள் நடாத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற சோதனையின் போது, சம்பந்தப்பட்ட நபர்கள் ரூ. 6,769 கோடி மதிப்பிலான வருமானத்தை கணக்கில் காட்டவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளனர்.

வருமானவரித்துறை விசாரணை இதுவரை சிவில் சட்டத்தின் அடிப்படையில் நடைபெற்றது. இனிமேல் வரி ஏய்ப்பு தொடர்பான முக்கிய வழக்குகள் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் விசாரிக்கப்படும்.

இதன்படி வருமான வரி சட்டம் 1961, பிரிவு 276சி-ன் படி வரி ஏய்ப்பில் ஈடுபடுவோருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## 173 இந்திய கைதிகளை விடுதலை செய்கிறது பாக்.



பாகிஸ்தான் சிறையில் இருந்து 173 இந்திய கைதிகள் விடுதலை செய்யப்பட உள்ளனர் என இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் சையத் அக்பரூ தீன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்தாண்டு ஜனவரி 1ஆம் திகதி நிலவரப்படி சுமார் 526 இந்தியர்கள் பாகிஸ்தானின் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சுமார் 173 பேர் வரும் 16ஆம் திகதி விடுவிக்கப்பட உள்ளனர் என பாக். அரசு தெரிவித்துள்ளது. வாகா எல்லைக்கு வரும் அவர்களை இந்திய அதிகாரிகள் வரவேற்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

## அகதிகளின் பிள்ளைகளை தடுத்துவைப்பது சட்ட மீறலாகும்

### அவுஸ்ரேலிய மனித உரிமை ஆணைக்குழு

தஞ்சம் கோரிகளின் பிள்ளைகளை தடுப்பு முகாம்களில் தடுத்து வைப்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயல் என்று அவுஸ்ரேலிய மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது.

அரசாங்க நிதியுதவியில் இயங்கும் இந்த ஆணைக்குழு, நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில், தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்படும் சிறார்கள், எதிர்கொள்ளும் உடல், உள மற்றும் பாலியல் ரீதியான துன்பங்களை விபரித்துள்ளது. சிறார்கள் துன்பங்களுக்கு உள்ளாகும் இத்தகைய 11 தடுப்பு முகாம்களில், படகுகளில் வந்தவர்களை அனுப்பி வைக்கும், நாட்டுக்கு வெளியேயான தடுப்பு முகாம்களும் அடங்குகின்றன.



இது குறித்த ஒரு தேசிய விசாரணை நடாத்தப்படுவதுடன், அந்தச் சிறார்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் அது பரிந்துரைத்துள்ளது.

இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றை அவுஸ்ரேலிய தலைமை அரச வழக்கறிஞர், ஜோர்ஜ் பிராண்டிஸ் மறுத்துள்ளார்.

## காட்டிக்கொடுப்பிற்கு தண்டனை பழிவாங்கும் யாஸிதி இன மக்கள்



யாஸிதி மக்கள் குர்திஷ் படையிடம் பயிற்சி பெற்று தங்களுக்கு எதிராக செயற்பட்ட இஸ்லாமியர்களை கொல்லத் தொடங்கியுள்ளனர்.

ஈராக்கின் சிஞ்சார் (Sinchar) மலைப்பகுதியில் வசிக்கும் சிறுபான்மையினத்தவரான யாஸிதி இன மக்கள் கடந்தாண்டில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் பல கொடுமைகளை அனுபவித்துள்ளனர்.

சுமார் 30,000 இற்கும் மேற்பட்ட சிறுமிகள் மற்றும் பெண்கள், பலமுறை தீவிரவாதிகளால் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டதுடன் பாலியல் அடிமையாகவும் ஆக்கப்பட்டிருந்தனர்.

மேலும் யாஸிதி ஆண்களை தலை துண்டித்தும், துப்பாக்கிச்சூடு நடாத்தியும் தீவிரவாதிகள படுகொலை செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில் தீவிரவாதிகளின் அட்டூழியங்கள் எல்லையில்லாமல் போனதால், அவர்களுக்கு எதிராக களமிறங்க யாஸிதி மக்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதனையடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ்-இற்கு எதிராக போராடி வரும் குர்திஷ் படையினரிடம் பயிற்சி பெற்று வந்துள்ளனர்.

தற்போது தங்களை காட்டிக் கொடுத்து, ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்த இஸ்லாமியர்களை குறிவைத்து யாஸிதி மக்கள் கொன்று குவித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கடந்த இரண்டு வாரத்தில் மட்டும் இதுபோல் 21 இஸ்லாமியர்களை யாஸிதிகள் கொன்றுள்ளதாக கூறப்படுகிறது.

உலகச் செய்திகள்

## நாடாளுமன்ற ஒப்புதலுக்கு பின் ஐ.எஸ்.ஐ.எஸ்.மீது தாக்குதல்

### ஒபாமா திட்டம்

(வொஷிங்டன்)

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தொடர்ந்து 3 ஆண்டுகள் தாக்குதல்கள் நடாத்துவதற்காக, ஒபாமா, அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலை நாடியுள்ளார். மேலும் அதற்கான தீர்மானத்தை ஒபாமா அனுப்பி வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தீர்மானத்தை செனட் சபையும், பிரதிநிதிகள் சபையும் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்ற நிலை உள்ளதாக கூறப்படுகிறது.



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள்மீது தரைவழித்தாக்குதல் நடாத்த ஒபாமாவின் தீர்மானம் வழி செய்கிறது. ஈராக்கில் கடந்த 2002ஆம் ஆண்டு, போர் தொடுத்த போது இதே போன்றதொரு தீர்மானத்தை அப்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழிலாளர்களின் துயர் துடைக்க எமது சேவைகள் இன்னும் தொடரும்



(பருத்தித்துறை)

எல்லை தாண்டும் இந்திய இழுவைப் படகுகளால் நாசமாக்கப்படும் நமது கடற்றொழிலாளர்களின் தொழில் வளங்களைப் பாதுகாத்து, அதற்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்காக அயராது முயற்சிகளை மேற்கொண்டவர்கள் நாங்கள். அதன் ஒரு நடவடிக்கையாகவே எல்லை தாண்டும் இந்திய மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டன என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியால் தமது கடற்றொழில் சங்கத்திற்கு செய்த சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 5.30 மணியவில் பருத்தித்துறை நகர கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அதன் தலைவர் சபாரட்ணம் சுகிர்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் மத்திய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கடற்றொழிலாளர் சமூகம் தமது ஜீவனோபாயத்திற்காக நாளாந்தம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வை எட்டுவதற்காக திட்டங்களை வகுத்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். நலிவுற்றிருந்த கடற்றொழிலாளர்களுக்கான வாழ்வாதார உதவியாக வலை, படகுகள், படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வான்பாதை அகழ்வுகளுக்கான நிதி உதவிகள் மற்றும் எல்லை தாண்டும் இந்திய இழுவைப் படகுகளால் பெறுமதிமிக்க வலைகள், கடல்வளம் நாசமாக்கப்படுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் மேற்கொண்டிருந்தார்.

தற்போது ஆட்சிமாற்றத்தின் பின்னரும் கடற்றொழிலாளர்களின் தொழில் வளங்கள் தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனை தற்போது மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சியில் அதிகாரத்தில் உள்ள கூட்டமைப்பினர் கடற்றொழில் சமூகத்திற்காக குரல் கொடுக்க தயங்குகின்றனர். தமது அரசியல் நலனுக்காக மௌனமாக இருந்து வருகின்றனர். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த உந்துதல் கொடுத்த கூட்டமைப்பினர் அதன் பலாபலன்களை மத்திய அரசிலிருந்து மக்களுக்கு பெற்றுக் கொடுக்க மறுத்து வருகின்றனர்.

மேலும் கொட்டடிப் பகுதியின் கரையோரத்தினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பருத்தித்துறை நகரசபை நிர்வாகம் மேற்கொண்ட போது அதனைத் தடுத்து நிறுத்தியிருந்தோம்.

நடராசா திறந்தவெளி அரங்கை அழகுபடுத்தப் போவதாகக் கூறி படகுகளையும் அவர்கள் அப்புறப்படுத்த முற்பட்டனர். அதனையும் தடுத்து நிறுத்தி கடற்றொழிலாளர்களின் படகுகளைக் கட்டுவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கரையோர இணைப்பாளர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமாருக்கும் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்து கௌரவித்தனர்.

# கஞ்சா கடத்திய இளைஞர் பொலிஸ் பிடியிலிருந்து தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் காவல் கடமையில் பொலிஸார் இருந்தபோதிலும் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பிரஸ்தாப இளைஞன் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டதாகவும், இதன் போது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது தவறுதலாக டீசல்லை குடித்தமையால் குறித்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை, 10 ஆம் இலக்க விடுதியிலிருந்து நேற்று முன்தினம் இரவு தப்பிச்சென்றுள்ளான்.

யாழ்ப்பாண நகரிலுள்ள கைத்தொலைபேசி கடையொன்றில் கடமைபுரியும் அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த நடராசா தர்ஷன் (வயது - 24) என்ற இளைஞரே இவ்வாறு தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ,25)

# வெளிநாட்டு தூதுவர்களுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பில் இருக்கின்ற வெளிநாட்டுத் தூதர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் ஆகியோரை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா, ஜனாதிபதியின் செயலாளர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## "நொதேர்ண் பவர்"...

நிறுவனத்தை தற்காலிகமாக மூட மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக குறித்த நிறுவனம் யாழ்.மேல் நீதிமன்றில் முறையீடுசெய்தது.

இந்த மேன்முறையீடு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நொதேர்ண் பவர் நிறுவனம் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணிகள் மல்லாகம் நீதவான் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்குமாறும், குறித்த நிறுவனத்தை மீண்டும் திறக்க அனுமதிக்க வேண்டும் என்றும் கோரி விண்ணப்பம் செய்திருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணியான மணிவண்ணன் கடுமையான ஆட்சேபனையை முன்வைத்தார். இதனையடுத்து மல்லாகம் நீதவான் நீதிமன்ற வழக்கேட்டினை மேல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறு உத்தரவிட்ட மேல்நீதிமன்ற நீதிபதி, தடையுத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று உத்தரவிட்டார்.

## யாழ். நகரில்...

அவர்கள் நாட்டுக்கு திரும்பி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமை இன்னும் உறுதிசெய்யப்படவில்லை. அதனை உறுதி செய்வது அரசின் கடமையாக இருக்கின்றது.

இதனை தோற்கடிக்க ஜனநாயகத்தை விரும்பும் அனைத்து சக்திகளும் முன்வரவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் முன்னிலை சோஷலிசக் கட்சியினர் இந்த கையெழுத்திடும் போராட்டத்தை யாழ். நகரில் நேற்று நண்பகல் வரை மேற்கொண்டனர்.

இதன்போது யாழ். பஸ் தரிப்பு நிலையத்திற்கு வந்த பெருமளவான மக்கள் வயது வேறுபாடின்றி தமது கையொப்பங்களை இட்டுச் சென்றனர். (இ,25)

## சுத்தமான...

இதனால் இப்பகுதிகளில் வாழும் மக்கள் தமது நாளாந்த குடிநீருக்காக அங்கும் இங்கும் தண்ணீர் கான்களுடன் அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக உள்ளது. மோட்டார் சைக்கிள்களிலும் துவிச்சக்கரவண்டிகளிலும் நீண்ட தூரம் சென்று குடிநீர் எடுத்து வருவது அவர்களின் நாளாந்த வேலையாகிவிட்டது.

நீண்ட தூரம் சென்று குடிநீர் பெறமுடியாதவர்கள் மாசடைந்த நீரையே இன்னமும் பயன்படுத்திவருகின்றனர். இதனால் இந்தப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கும் தினசரி வெளியிடத்தில் இருந்தே குடிநீர் எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டுவருகிறது.

இந்த நெருக்கடியான சூழலைப்புரிந்து கொண்ட குடிநீர் போத்தல் விற்பனை செய்யும் நிறுவனங்கள் களத்தில் இறங்கின.

இந்தப்பகுதிகளை இலக்கு வைத்து தமது வியாபாரத்தை முடுக்கிவிட்டன. எதிர்பார்த்ததுபோல அப்பகுதிகளில் இப்போது போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் வியாபாரம் வெகுவேகமாக நடைபெறுகிறது.

கடந்த ஒரு மாத காலப்பகுதியில் மட்டும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் வியாபாரம் வலிகாமம் பகுதியில் மூன்றுமடங்காக அதிகரித்துள்ளது. இந்தக் குடிநீர் நுகர்வு மேலும் அதிகரித்துச் செல்ல வாய்ப்புள்ளதாக விநியோக முகவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் வறுமையில் வாடும் குடும்பங்கள் குடிநீரை பணம் கொடுத்து வாங்க அவர்களது பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை.

அதேவேளை நீண்டகால திட்டமிடலுக்குப்பின்னர் செயற்படுத்தப்படவிருந்த இரணைமடு குடிநீர் விநியோகத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் தற்போதைய குடிநீருக்கான மேற்படி நெருக்கடி நிலையை மிக சாதுரியமாக தவிர்த்து பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைத்திருக்கும் என்றும், துரதிஷ்டவசமாக அந்த பாரிய திட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக நிறுத்தப்பட்டுவிட்டது என்று வலிகாமம் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் விசனம் வெளியிட்டனர்.

## வலி. வடக்கு...

அளித்தமைக்கு அமைய தற்போது காணிகளை பொது மக்களிடம் கொடுக்க வேண்டும்.

தற்போது வடக்கில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பினை விடுவிப்பதென அரசாங்கம் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்க விடயமே. ஆயினும் ஆயிரம் ஏக்கரில் அனைவரையும் குடியமர்த்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். விடுவிக்கப்படவுள்ள காணிகளில் உரிய மக்களின் காணிகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதேபோல் ஏனைய மக்களின் காணிகளையும் உடனடியாக அம்மக்களுக்கு வழங்க வேண்டும்.

அரசாங்கம் சகல மக்களுக்கும் சாதகமான வகையில் செயற்படுவதாக கூறியது. அதைக் கைவிட்டுவிட்டு ஆயிரம் ஏக்கரில் இச்செயற்பாட்டினை மேற்கொள்ள முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே அரசாங்கம் எமக்கும் மக்களுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை உடனடியாக செயற்படுத்த நாம் அரசுக்கு வலியுறுத்துகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

## இன நல்லிணக்கம்...

முப்படைகளுக்கு பொலிஸாருக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கும் நடவடிக்கையானது எமது மக்களிடையே அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளதால் தேசிய நல்லிணக்கம் குறித்து கேள்விகள் எழுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள செயலாளர் நாயகம்,

இனங்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் அகன்று, பரஸ்பர நம்பிக்கைகள் வலுப்பெற வேண்டும் என்ற நோக்கில் உரிமைக்குக் குரல் கொடுத்து உறவுக்குக் கரம் கொடுத்தே எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டு வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதை நாம் ஆரம்பந்தொட்டே வலியுறுத்தி வருகின்றோம்.

சிவில் நிர்வாகத்தில் படைகளின் தலையீட்டினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை கடந்த காலங்களில் நாம் சுமுகப் பேச்சுவார்த்தைகளின் மூலம் முன்னெடுத்திருந்தோம். இதன் பிரகாரம் சிவில் நிர்வாகத்தில் படைகளின் தலையீடுகளைப் படிப்படியாக குறைத்து, இறுதியில் முற்றாக அதனை அகற்றும் நிலையை உருவாக்கி வந்திருந்தோம்.

இந்நிலையில், தமிழ் பேசும் மக்கள் நிம்மதியான வாழ்க்கையை நோக்கிப் படிப்படியாக முன்னேறி வரும் நிலையில், பொலிஸாருக்கு உரிய அதிகாரங்கள் முப்படைகளுக்கும் வழங்கியிருப்பதானது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றன.

எனவே, தேசிய நல்லிணக்கத்தின்பால் தமிழ் பேசும் மக்களும் சுயமாக ஈர்க்கப்படக்கூடியதான முயற்சிகளையே அரசு மேற்கொள்ள வேண்டிய நிலையில், தமிழ் பேசும் மக்களிடையே தற்போது ஏற்பட்டிருக்கும் அச்சத்தையும், பீதியையும் போக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

## காங்கேசன்....

துறைமுகமும் அபிவிருத்தியடைந்து வடக்கின் ஏனைய கட்டமைப்புக்களும் விருத்திபெறும்.

இதேவேளை இங்குள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் மீள்குடியேற்றம் சம்பந்தமான நடவடிக்கைகளை ஜனாதிபதியும் பிரதமரும் முன்னெடுத்துள்ளனர். இந்த வகையில் கீரிமலைப் பகுதியில் உள்ள கடற்படை முகாமுக்கு அருகிலுள்ள காணிகள் விடயத்திலும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

## கட்டுநாயக்கவில்...

சிங்கப்பூருக்குச் சென்று அதனூடாக ஜேர்மன் செல்லவிருந்த மேற்படி பயணியும், அவருடன் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு இளைஞர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்காக போலி ஆவணங்களை தயாரிக்கும் முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முழுமையான மின்சார விநியோகம் வன்னியில் ஏற்படுத்த வேண்டும்

## ராஜாங்க அமைச்சர் பாலிதவிடம் சந்திரகுமார் எம்.பி. கோரிக்கை



(கிளிநொச்சி)

வன்னியில் தற்போது எஞ்சியிருக்கும் பிரதேசங்களுக்கான மின்சார விநியோம் விரைவாக வழங்கப்பட வேண்டும என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதிதலைவருமான முருகேசு சந்திரகுமார் மின்சக்திதுறை இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று வவுனியாவில் உள்ள விடுதி ஒன்றில் மின்சக்திதுறை இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவின் தலைமையில் நடைப்பெற்ற வடக்கு மாகாண மின்விநியோக நிலைமைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்படி கோரிக்கையினை விடுத்துள்ளார்.

வன்னியில் பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட மின்சார விநியோகப் பணிகள் தற்போது எண்பது, தொன்னூறு வீதத்தினை எட்டியுள்ளது. இருந்தும் இன்னும் சில பிரதேசங்களுக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட வேண்டியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரு சில கிராமங்களுக்கு மின்சார விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அத்தோடு சுமார் நான்காயிரம் பாவனை இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் ஆனால் அதற்கான உபகரணங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் தற்போது உபகரணப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது எனவே விரைவாக எஞ்சியுள்ள மின்சார விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

இலவச மின் இணைப்புக்கான தூரம் ஐம்பது மீற்றர் என வரையறுக்கப்பட்டுள்ளது என அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தபோது அதற்கு தனது அதிருப்தியை வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆரம்பத்தில் 110 மீற்றராக இருந்த வீடுகளுக்கான இலவச மின் இணைப்பு தூரமானது தற்போது 50 மீற்றராக குறைக்கப்பட்டுள்ளமையானது வன்னியை பொறுத்தவரை மக்களுக்கு அதிக பாதிப்புக்களையே ஏற்படுத்தும். இது நடைமுறை நகர்புற மக்களுக்கு நன்மையளிப்பினும் கிராமங்களை பொறுத்தவரை பரந்தளவு காணிகளில் வீடுகளை அமைத்து குடியிருக்கும் மக்களுக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். வீடுகளை நோக்கி மின்சாரத்தை கொண்டு செல்லலாமே தவிர மின்சாரத்தை நோக்கி வீடுகளை நகர்த்த முடியாது எனவே இதனை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மின்சக்திதுறை இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார, அமைச்சின் செயலாளர் ஹேரத், அமைச்சின் மேலதிக பொது முகாமையாளர் பிரியங்க, மின்சார சபையின் வடமாகாண பிரதி பொதுமுகாமையாளர் குணதிலக, வடக்கின் வசந்தம் பொது முகாமையாளர் குணசீலன், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்திவு, மாவட்டச் செயலாளர்கள், வடமாகாண பிரதேச செயலகங்களின் செயலாளர்கள், உள்ளூராட்சி அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கழிவு வாய்க்காலினுள் பாய்ந்த மோட்டார் சைக்கிள்



(யாழ்ப்பாணம்)

வேம்படி வீதி இரண்டாம் குறுக்கு வீதிச் சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கழிவு வாய்க்காலில் வீழ்ந்தது.

வேம்படி வீதியால் பாடசாலை சிறார்களை ஏற்றிக் கொண்டு வந்த ஆட்டோவுடன் இரண்டாம் குறுக்கு வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஆட்டோ குடை சாய்ந்ததுடன் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கழிவு நீர் ஓடைக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் ஆட்டோவில் பயணித்த இரு பாடசாலைச் சிறுவர்கள் சிறு காயமடைந்தனர். இவ்விபத்துக் குறித்து யாழ். போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (இ)

# அரசு எதிர்பார்ப்பது வெளிநாட்டு முதலீடுகளையே

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு முதலீடுதான் அவசியம் கடனல்ல- முன்னைய அரசாங்கம் கடன் பெற்றே பாரிய அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது என பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்- அரசாங்கம் இந்திய முதலீடுகளை எதிர்பார்க்கிறது. கடந்த முன்னைய அரசாங்கத்திற்கு முதலீடுகள் வரவில்லை. இருந்த முதலீடுகளும் குறைந்து போயின. கண்டியில் மட்டும் 22 தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

அம்பாந்தோட்டை துறைமுகம்- மத்தல விமான நிலையம் என்பன சர்வதேச கடனைப் பெற்றே செய்யப்பட்டன.நாட்டில் அநீதியை நீக்குவதற்கே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. முன்னைய அரசை போன்று எம்மால் நடந்துக் கொள்ள முடியாது.

இந்நாட்டில் நீதியையும் ஜனநாயகத்தையும் மேம்படுத்தவே நாங்கள் வந்தோம். மெதமுலன முறை போன்று இதனை முன்னெடுக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் சிறந்த நல்லிணக்கம் காணப்படுகிறது என்பது இடைக்கால வரவு செலவு வாக்களிப்பில் எடுத்துக் காட்டுகிறது என பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர்கூடத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்- வரவுசெலவின் போது எதிர்பாராதவர்களும் சாதகமாக வாக்களித்தனர் எமக்கு எதிராக யாரும் வாக்களிக்கமாட்டார்கள். நாடாளுமன்றத்தில் அந்நியோன்ய நம்பிக்கையொன்று காணப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது, தகவல் அறிந்துக் கொள்ளும் உரிமைக்கான சட்டமூலத்தை உருவாக்குதல் என்பனவற்றை வரவேற்கின்றனர்.

அவர்கள் விரும்பியபோதும் செய்ய முடியாத நிலைமை காணப்பட்டதே உண்மை. முன்னைய அரசாங்கம் அதனைச் செய்யவில்லை. எதிர்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதாக அன்று கூறினார்.

13ஆவது திருத்தச்சட்டத்தை ஐக்கிய தேசிய கட்சியே ஏற்படுத்தியது. மகிந்த ராஜபக்ஷ 13+ஐ தருவதாகக் கூறினார். ஆனால் செய்யவில்லை. நாடு முழுவதும் ஏற்றுக்கொள்ளும் தீர்வை ஏற்படுத்துவது அவசியம் என்று கூறினார்.

# அலரி மாளிகையில் சதி முயற்சி விசாரணைகள் ஆரம்பம்?

(கொழும்பு)

இராணுவ சதிப் புரட்சிக்கு முயற்சித்தமை, இரகசிய ஆயுதக் களஞ்சியசாலை நடத்தியமை, ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று பிற்பகல் ஆரம்பிக்கப்பட்ட விசாரணை எனினும் இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவித்தலை பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று இரவு வரை வெளியிடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவப் புரட்சிக்கு முயற்சிகளை மேற்கொண்டமை தொடரபான குற்றச்சாட்டுகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரரும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ஷ ஆகிய இருவரையும் விசாரணை செய்வதற்கான ஆலோசனையை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து பெறுவதற்கு காத்திருப்பதாக பொலிஸ் தலைமையகம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்த நிலையில் தற்போது முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, சுமார் இரண்டு மணிநேரத்திற்கும் அதிகமாக இந்த விசாரணை இடம்பெற்று வருவதாக கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# அந்த சிங்கம் மரணத்தை தழுவியது

(கொழும்பு)

இராணுவத்தின் சிங்க ரெஜிமெண்ட் செல்லப்பிராணியான குகர் என்ற சிங்கம் கடந்த புதனன்று உயிரிழந்துள்ளது.

18 வயதான அச்சிங்கத்தின் உடல் சமய சடங்குகளையடுத்து சிங்க ரெஜிமெண்ட் மத்திய நிலைய பூமியில் அடக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் சிங்க ரெஜிமெண்ட் உயரதிகாரி பிரிகேடியர் பீ.ஏ.எல். ரத்நாயக்க உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

1996ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி தெஹிவலை மிருகக்காட்சிசாலையில் பிறந்த குகர் சிங்க ரெஜிமென்ட்டின் வேண்டுகோளுக்கிணங்க அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் அதே ஆண்டு 3ஆம் திகதி பரிசளிக்கப்பட்டது.

இறக்கும் போது குகர் 2.5 அடி உயரமும் 5 அடி நீளமும் கொண்டிருந்தது. இதன் தாயகம் தென் ஆப்பிரிக்கா ஆகும்.

# பசில் மீதான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்க இன்ரர்போல் உதவி

## அமைச்சர் ராஜித தகவல்

(கொழும்பு)

சர்வதேச பொலிஸான இன்டர்போலின் உதவியுடன் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித்த சேனாரட்ன சீன ஊடகமொன்றுக்கு இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற மிகப் பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பாரிய நிதி மோசடிகளுடன் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸவிற்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் நிறைவைத் தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமெரிக்காவிற்கு சென்றுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பசில் ராஜபக்ஷவிற்கு எதிராக லஞ்ச ஊழல் ஒழிப்பு தவிர்ப்பு ஆணைக்குழுவில் ஏற்கனவே, முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.